விலை: 30.00
viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கலயாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 17 புதன்கிழமை (03.11.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 319

தமிழ் பேசும் கட்சிகள்

## இரண்டு வாரங்களில் மீண்டும் சந்திக்க முடிவு

**ஏனைய தமிழ்க் கட்சிகளை இணைக்க ஏற்பாடு**

(யாழ்ப்பாணம்)

தமிழ் பேசும் தமிழ்க் கட்சிகள் மீண்டும் இரு வாரங்களில் மீண்டும் ஒன்றிணைந்து சந்திப்பதற்கு முடிவு செய்துள்ளன.

மேலும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகளையும் ஒன்றிணைப்பது தொடர்பிலும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## அரிசிக்கு தட்டுப்பாடு என்றால் மரவள்ளிக்கிழங்கை சாப்பிடுங்கள்



**நாட்டு மக்களுக்கு அமைச்சர் சமல் அறிவுரை**

(கொழும்பு)

**அரிசிக்கு தட்டுப்பாடு என்றால் மரவள்ளிக்கிழங்கை சாப்பிடுங்கள் என அமைச்சர் சமல் ராஜபக்ஷ பொதுமக்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.**

நாட்டில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படும்போது, கடந்த காலங்களில் கிராமங்களில் மரவள்ளி கிழங்கு, பாசிப் பயறு போன்றவற்றை 15

மின்சார ஊழியர்களின்

## பணி நிறுத்தம் இடம்பெறாது

(கொழும்பு)

திட்டமிடப்பட்டபடி, இன்று 3ஆம் திகதி பணி நிறுத்தம் மேற்கொள்ளப்படமாட்டாது என்று இலங்கை மின்சார சபையின் தொழிற் சங்கம் அறிவித் 15

தமிழர்களின் நீண்டகால கோரிக்கைகள்

# அரசியல் தீர்வு மூலம் நிறைவேற்ற வேண்டும்

**தமிழ் பேசும் கட்சிகள் ஒன்றிணைந்து தீர்மானம்**



*(யாழ்ப்பாணம்)*

தமிழ் பேசும் மக்களின் நீண்டகால கோரிக்கை அரசியல் தீர்வு மூலம் நிறைவேற்றப்பட வேண்டும் என யாழில் தமிழ் பேசும் கட்சிகள் ஒன்றிணைந்து தீர்மானித்துள்ளன. *(15ஆம் பக்கம் பார்க்க)*

## சீனிக்கான கட்டுப்பாட்டு விலை நீக்கம்

(கொழும்பு)

சீனிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையை நீக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அறியமுடிகிறது.

அதன்படி, ஒரு கிலோ கிராம் வெள்ளைச் சீனி 15

தமிழ், முஸ்லிம் இனத்தவர்களை

## நெருக்கமாக்கிக் கொள்வதே சிறந்த செயல் - பிரதமர் மகிந்த

(கொழும்பு)

தமிழ், முஸ்லிம் இனத்தவர்களை நெருக்கமாக்கிக் கொள்வதே சிறந்த செயல் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சி பெரிதாக இருப்பினும், சிறிதாக இருப்பினும் ஒன்றாக ஒரே நோக்கத்திற்காக போராடியவர் 15

## நல்லூரில் கந்தசஷ்டி

**நேரலையில்**

(யாழ்ப்பாணம்)

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் 'பிலவ' வருட 15

**புலமைப்பரிசில், சா/த, உயர்தரம்**

## பரீட்சைகளுக்கான திகதிகள் அறிவிப்பு

(கொழும்பு)

2021ஆம் ஆண்டு பரீட்சைகள் இடம்பெறும் தினங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் 5ஆம் தர புலமைப்பரி 15

**வடக்கு ஆளுநர் அலுவலகம் முன்பாக விவசாயிகள் கவனயீர்ப்பு போராட்டம்**

03ஆம் பக்கம் பார்க்க


## இணைந்த வடக்கு-கிழக்கில் உயர்ந்தபட்ச சமஷ்டியே இனப் பிரச்சினைக்கான தீர்வு



**இந்தியாவை வலியுறுத்த கோரவேண்டும் தமிழ்க் கட்சிகளிடம் நீதியரசர் விக்னேஸ்வரன்**

(கொழும்பு)

இலங்கைத் தீவில் தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசம். வடக்கு, கிழக்கு அவர்களின் மரபுவழி தாயகம். பராதீனப்படுத்தாத சுயநிர்ணய 15



## தமிழ் - முஸ்லிம் தரப்பினர் ஒன்றிணைவது அவசியம்

**யாழில் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு**

(கொழும்பு)

தமிழ் தரப்புக்களும் முஸ்லிம் தரப்புகளும் தேர்தல் உட்பட அனைத்து நடவடிக்கையிலும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான அவசியம் மிகவேகமாக உணரப்பட்டு இருக்கின்றதென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 15

## சிங்கள குடியேற்றத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம்

**தமிழ்க் கட்சிகள் முடிவு**

(வவுனியா)

வவுனியாவில் இடம்பெறும் சிங்கள குடியேற்றத்தை கண்டித்து எதிர்வரும் 10ஆம் திகதி நெடுங்கேணியில் அமைந்துள்ள வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்கு முன்பாக பாரிய ஆர்ப்பாட்டத்தை நடத்த தமிழ்க் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

அநுராதபுரம் வடக் 15

# முகக்கவசம் அணியாத 25 பேர் யாழில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் முகக்கவசம் அணியாத 25 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்ட பின் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். நகரில் தற்பொழுது பண்டிகை காலம் என்பதனால் பொதுமக்கள் அதிகளவில் ஒன்றுகூடியுள்ள நிலையில், நேற்றைய தினம் யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான அணியினர் திடீரென வீதிப் பரிசோதனை நடவடிக்கையினை முன்னெடுத்தபோதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த 25 பேரும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டு பின் விடுவிக்கப்பட்டனர்.

இவ்வாறான நடவடிக்கை தொடர்ச்சியாக எதிர்வரும் நாட்களிலும் முன்னெடுக்கப்படும் எனவும், பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை சரிவர கடைப் பிடிக்க வேண்டும் எனவும் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ம-03,18,33)

# சீரற்ற காலநிலை; 4 பேர் உயிரிழப்பு

சீரற்ற காலநிலையால் கடும் மழை, வெள்ளம் மற்றும் பலத்த காற்று உள்ளிட்டவை காரணமாக 10 மாவட்டங்களில் உள்ள 41பிரதேச செயலகங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

மோசமான வானிலை காரணமாக 1,444 குடும்பங்களைச் சேர்ந்த 5,790 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுதத்த ரணசிங்க தெரிவித்தார்.

வெள்ளம் காரணமாக 4 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளனர்.

இந்த காலப்பகுதியில் மூன்று வீடுகள் முழுமையாகவும் 409 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக மேஜர் ஜெனரல் சுதத்த ரணசிங்க தெரிவித்தார்.

நிலவும் காலநிலையில் அடுத்த சில நாட்களில் சிறிய மாற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-03)


## அறிவித்தல்

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் 2022 / 2023 ஆம் ஆண்டுகளுக்கான நிர்வாக சபை தெரிவும் எதிர்வரும் 20.11.2021 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளது. அங்கத்தவர் மற்றும் நலன்விரும்பிகள் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- தலைவர் -

உதயசங்கர் - 077 707 0117

(C-2937)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

**வெளிவாரிப் பரீட்சைகள்**
**வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி (வெளிவாரி)**

- *முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2019*
- *இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2019*

மேற்படி பரீட்சையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் டிசம்பர் மாதமளவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திலோ அல்லது **www.codl.jfn.ac.lk** எனும் இணையத்தள முகவரியிலோ விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி **22.11.2021 (திங்கட்கிழமை)** ஆகும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களினை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் **(காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணி வரை)** சமர்ப்பிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் கீழ்த் தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

**பிரதிப் பதிவாளர்,**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.**

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் **021-222-3612** என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்**
**02.11.2021**

(C-2935)

## மாநகர சபை யாழ்ப்பாணம்

## நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம் கோரல் - 2021

யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஆதனவரி அறவீடுகளை மேற்கொள்வதற்கு ஆதனவரிப் பகுதியின் கீழ் கடமையாற்றுவதற்கு நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவிக்கான (3பேர்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரி உடல் ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் யாழ். மாநகர சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. விண்ணப்பப் படிவத்தினை மாநகரசபையில் பெற்றுக்கொள்ளவும். பிறப்பு சான்றிதழ், கல்விச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, கிராம சேவையாளரின் நற்சான்றிதழ் மற்றும் வதிவிடச்சான்றிதழ் என்பவற்றின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.
3. நடுக்கட்டு உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்படுபவருக்கு, அவர் சேகரிக்கும் ஆதனவரி (கடந்த வருடங்களில்) நிலுவைத் தொகையின் 12% மான தொகை தரகு (Commission) அடிப்படையிலான கொடுப்பனவாக வழங்கப்படும். அவரால் மாதாந்தம் சேகரிக்கப்படும் தரகுப் பணத்தின் 8% இனை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும். சபையினால் சேகரிக்கப்படும் தரகுப் பணத்தின் 12% மான தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், 3% மான தொகை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பு செய்யப்படும்.
4. நியமனம் பெறும் நடுக்கட்டு உத்தியோகத்தர் ரூபா இருபத்தையாயிரத்தை (25,000.00) மீளளிக்கக்கூடிய பிணைப்பணமாக செலுத்துதல் வேண்டும்.
5. கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் "நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு 2021.11.16 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்கக்கூடியதாக " **ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்** " என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவேண்டும்.
6. விண்ணப்பதாரிகள் நேர்முகத்தேர்வு மூலம் தெரிவு செய்யப்படுவார்கள். நேர்முகப்பரீட்சைக் குழுவின் முடிவே இறுதியானது.
7. நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவிக்கு நியமிக்கப்படுவோர் இப்பதவியில் கடமையாற்றியதன் அடிப்படையில் சபையின் எந்தவொரு நிரந்தர பதவிக்கான நியமனத்தையும் கோரமுடியாது.

**மாநகர ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.** (C-2936) **03.11.2021**

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 1939 - 08 - 28
இறப்பு 2021 - 08 - 30

**அமரர் கனகமணி சதாசிவம்**
எமது பாடசாலை ஆசிரியை
திருமதி **பாலதேவி தர்மரூபன்** அவர்களின்
பாசமிகு மாமியார்



பிறப்பு 1940 - 03 - 18
இறப்பு 2021 - 09 - 26

**அமரர் கந்தையா சுந்தரலிங்கம்**
எமது பாடசாலை ஆசிரியர்
திரு. **நடராசா சண்முகலிங்கம்** அவர்களின்
பாசமிகு மாமனார்



பிறப்பு 1946 - 11 - 08
இறப்பு 2021 - 10 - 26

**அமரர் அரியமலர் துரைசிங்கம்**
எமது பாடசாலை ஆசிரியை
திருமதி **சுஜாதா சசிகரன்** அவர்களின்
பாசமிகு மாமியார்

இவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பங்களிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவர்களது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

(C-2938)

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம் - கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை - கிளிநொச்சி**

# வடக்கு ஆளுநர் அலுவலகம் முன் விவசாயிகள் கவனயீர்ப்புப் போராட்டம்

**(யாழ்ப்பாணம்)**

**விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு கோரி வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு முன்பாக நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**





அரசினால் உர இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளதோடு கால் நடைகளுக்கான தீவனம் பெறுவதிலும் இடர்பாடு காணப்படுவதனால் விவசாயிகள் கால் நடை வளர்ப்போர், பண்ணையாளர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகோரி மேற்படி போராட்டம் இடம் பெற்றது.

அத்துடன் வலி.வடக்குப் பகுதியில் நல்லாட்சி அரசாங்கத்தின் போது தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்தில் முதல் கட்ட நிதி மட்டுமே பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

மீதிக்கொடுப்பனவுகள் இன்று வரை மக்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே, பாதிக்கப்பட்ட அனைவரும் ஒன்றிணைந்து வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டதாக குறித்த போராட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் எஸ்.பிரபாகரன் தெரிவித்தார். (4-5-18-33)

# கொள்கலன் ஊர்தி- சிற்றூர்ந்து நேருக்கு நேர் மோதி விபத்து

## ஒருவர் பலி, இருவர் காயம்



(கொழும்பு)

வெல்லவாய - தனமல்வில பிரதான வீதியின் குடாஓய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெலுல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை கொள்கலன் ஊர்தியொன்றும், சிற்றூர்ந்து ஒன்றும் நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் சிற்றூர்ந்தின் சாரதி உயிரிழந்தார்.

இந்த விபத்தில் மேலும் இருவர் காயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சியம்பலாண்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதான இளைஞரொருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-5)

# கர்ப்பிணி பெண்களை மீண்டும் சேவைக்கு அழைக்கத் தீர்மானம்

(கொழும்பு)

மீண்டும் கர்ப்பிணி பெண்களை சில வரையறைகளுக்கு உட்பட்டு சேவைக்கு அழைக்க உள்ளதாக அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரத்னசிறி தெரிவித்தார்.

அதேவேளை இந்த அழைப்பானது சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களின் தேவைக்கு அமைய மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

சில நிறுவனங்களை நடத்திச் செல்வதில் ஏற்பட்டுள்ள சிக்கல்களை கவனத்தில் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பான சுற்றறிக்கை இதுவரை வெளியிடப்படவில்லை எனவும் ரத்னசிறி தெரிவித்தார். (நி)

# ஏ.30 பிறழ்வு குறித்து கண்காணிப்பு அவசியம்

## கலாநிதி சந்திம தெரிவிப்பு



(கொழும்பு)

உலகின் சில நாடுகளில் புதிதாக இனங்காணப்பட்டுள்ள ஏ.30 பிறழ்வினை எண்ணி அச்சப்படத் தேவையில்லை. குறித்த பிறழ்வு இதுவரையில் உலகளாவிய ரீதியில் பரவலடையவில்லை.

எவ்வாறிருப்பினும் இது தொடர்பில் தொடர் கண்காணிப்பு அவசியமாகும் என ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பு மற்றும் ஒவ்வாமை பிரிவின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்தார். "ஏ.30" வைரஸ் பிறழ்வு தொடர்பில் அவர் மேலும் தெளிவுபடுத்தியதாவது,

ஜீ.ஐ.எஸ்.ஏ.ஐ.டீ. தரவுத்தளத்தில் சேமிக்கப்பட்ட மரபணுக்களில் 5 மாத்திரமே ஏ.30 பரம்பரையைச் சேர்ந்தவையாகும்.

அங்கோலாவில் 3, சுவீடன் மற்றும் பிரித்தானியாவில் ஒன்று என இந்த பிறழ்வுகள் கண்டு இனங்காணப்பட்டுள்ளன. இவை மே மற்றும் ஜூன் மாதங்களில் சேகரிக்கப்பட்ட தரவுகள் ஆகும்.

அங்கோலாவில் ஏ.30 பிறழ்வுடன் இனங்காணப்பட்ட மூவரும் 20, 23 மற்றும் 26 வயதுகளையுடைய ஆண்களாவர். இவர்களது மாதிரிகள் கடந்த பெப்ரவரியில் பெற்றுக் கொள்ளப்பட்டவையாகும்.

இவர்கள் மூவரும் ஆபிரிக்காவிற்கு சென்றுள்ளமையும் சேகரிக்கப்பட்ட தகவல்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

பிரித்தானியா மற்றும் சுவீடனில் பெற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிகள் தொடர்பில் போதியளவு தரவுகள் சேகரிக்கப்படவில்லை.

எனினும் கொவிட் சோதனைகள் குறைவாகக் காணப்படுகின்ற பகுதிகளில் இந்த பிறழ்வு கண்டறியப்படாமலிருப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

இது தொடர்பில் அண்மையில் வெளியாகியுள்ள செய்திகள் மக்களை அநாவசிய பீதிக்கு உள்ளாக்கக் கூடும். எவ்வாறிருப்பினும் இது தொடர்பில் தொடர் கண்காணிப்பு அத்தியாவசியமானதாகும் என்று தெரிவித்தார். (நி)

# சுபீட்சமான எதிர்காலத்தின் ஆரம்ப நாளாக தீபாவளி அமையட்டும்

## தீபாவளி வாழ்த்துச் செய்தியில் பிரதமர்

(கொழும்பு)

மிக நீண்டகாலமாக எமது மக்களைப் பிரித்து வைத்திருந்த அனைத்து வேறுபாடுகளையும் களைவதற்குரிய தருணமாக இத்தீபாவளித் திருநாளைக் கொண்டாடுவோம் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பிரதமர் வெளியிட்டுள்ள தீபாவளி தின வாழ்த்துச் செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் அவர் குறிப்பிடுகையில்,

"நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு" எனும் அரசாங்கத்தின் தேசிய கொள்கைக்கு அமைவாக, ஒளி நிறைந்த வளர்ச்சிப் பாதை நோக்கி, பல தடைகளைத் தாண்டி நாம் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

அனைத்துத் துறைகளிலும் நம் தேசம் முன்னேற்றம் காண வேண்டும் என்பதே எம் அனைவரினதும் பெருவிருப்பாகும். இன்று உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா நோய்த் தொற்றிலிருந்து இலங்கை மக்களைப் பாதுகாக்கும் பணியோடு, பல முன்னேற்றகரமானதும் ஆக்கபூர்வமானதுமான செயற்பாடுகளையும் நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

அனைவரதும் அபிலாசைகள் நிறைவேறி, இலங்கைத் திருநாடு சுபீட்சம் மிக்கதோர் தேசமாக மலரும் நல்லதோர் எதிர்காலத்தின் ஆரம்ப நாளாக இத்தீபாவளித் திருநாள் அமையட்டும்.

இந்துக்கள் அனைவராலும் பக்தியோடும் சிறப்போடும் கொண்டாடப்படும் இத் தீபாவளித் திருநாளில் அனைவருக்கும் வாழ்த்து தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். தேசிய ஒற்றுமையைப் போற்ற இது ஒரு சிறந்த நாளாகும்.

சகல மதங்களிலும் விளக்கு ஏற்றி வழிபாடு செய்யப்படுவதென்பது, எம்முள் இருக்கும் அறியாமை என்னும் இருள் அகன்று அகவொளி பிரகாசிக்க வேண்டும் என்பதற்கான குறியீடாகும்.



இந்நன்னாளில் ஏற்றப்படும் தீப ஒளியும் சமூகங்களுக்கு மத்தியில் சிறந்த புரிந்துணர்வுக்கான சமிக்ஞையாகவே எண்ணப்பட வேண்டும்.

மிக நீண்டகாலமாக எமது மக்களைப் பிரித்து வைத்திருந்த அனைத்து வேறுபாடுகளையும் களைவதற்குரிய தருணமாக இத்தீபாவளித் திருநாளைக் கொண்டாடுவோம் என வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# தேசிய கபடிப் பெண்கள் அணியில் யாழிலிருந்து நான்கு வீராங்கனைகள்




இலங்கை தேசிய கபடிப் பெண்கள் அணியில் யாழ். மாவட்ட வீராங்கனைகள் 4 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 30 ஆம் திகதி கொழும்பு ரொறிண்டன் விளையாட்டு அமைச்சின் உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்ற இலங்கை தேசிய கபடிப் பெண்கள் அணி தெரிவு நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய வி.டிலக்சனா, இ.பிரியவர்னா, து.சுயர்னியா, எஸ்.மேரி நிலக்ஷனா ஆகியோர் 18 பேர் கொண்ட தேசிய அணி குழாமில் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

ஆசிய கபடிப் போட்டிகள் சீனாவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-90)

# பரிஸ் மாஸ்டர்ஸ் என்டி முர்ரே தோல்வி



பரிஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு முதல் சுற்றுப் போட்டியில், என்டி முர்ரே போராடி தோல்வியடைந்துள்ளார்.

ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு முதல் சுற்றுப் போட்டியில், பிரித்தானியாவின் என்டி முர்ரேவும் ஜேர்மனியின் டொமினிக் கோஃபரும் பலப்பரீட்சை நடத்தினர்.

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற இப் போட்டியில், முதல் செட்டை 6-4 என டொமினிக் கோஃபர் கைப்பற்றினார்.


இதனைத்தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டில், பதிலடி கொடுக்கும் முனைப்பில் விளையாடிய என்டி முர்ரே செட்டை 7-5 என கைப்பற்றி பதிலடி கொடுத்தார்.

இருவரும் தலா ஒரு செட்டைக் கைப்பற்றியதால், வெற்றியை தீர்மானிக்கும் மூன்றாவது செட் பரபரப்படைந்தது.

இருவரும் விட்டுக்கொடுக்காமல் விளையாடியதால், செட்டை பிரேக் வரை நகர்ந்தது.

இதில் யாரும் எதிர்பாராத வகையில் சிறப்பாக விளையாடிய டொமினிக் கோஃபர், செட்டை 7-6 என கைப்பற்றி வெற்றி பெற்றார். (4-6)

# ஜோஸ் பட்லர் சதம்; இங்கிலாந்து வெற்றி



இருபது-20 உலகக் கிண்ண தொடரின் 29 ஆவது லீக் போட்டியில், இங்கிலாந்து அணி 26 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

சார்ஜாவில் நேற்று முன்தினம் குழு 1 இல் நடைபெற்ற இப்போட்டியில், இங்கிலாந்து அணியும் இலங்கை அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 164 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதனைத்தொடர்ந்து 165 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இலங்கை அணி, 19 ஓவர்கள் நிறைவில் 137 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் இங்கிலாந்து அணி 26 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக 67 பந்துகளில் 6 சிக்ஸர்களையும் 6 பவுண்ரிகளையும் விளாசி, ஆட்டமிழக்காது 101 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட ஜோஸ் பட்லர் தெரிவு செய்யப்பட்டார். (4-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2441


### யான்சிகா





### யதுர்ஷன்




### சுந்தர்




### பிருத்தி




### கமல்பவி




### சிவா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## இராசிபலன்

03.11.2021
ஐப்பசி 17, புதன்கிழமை
திரயோதசி முற்பகல் 7.39 மணிவரை
சதுர்த்தசி பின்னிரவு 5.54 மணிவரை
அத்தம் முற்பகல் 9.14 மணிவரை
சுபநேரம்- 4.34- 6.04 மணிவரை
இராகு காலம்- 12.04- 1.34 மணிவரை
சந்திராஷ்டமம்- உத்தரட்டாதி

வளவன்


மேஷம்

நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், தொழில் நலனில் குறுக்கிடாக இருந்தவர்கள் விலகுவர்.


ரிஷபம்

எதிர்கால நலன்கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்புண்டு.


மிதுனம்

பிரியமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பொன்னான நாள், பயணங்களால் பலனுண்டு.


கடகம்

அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறலாம், புதிய முயற்சிகள் கைகூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


சிம்மம்

ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், சிறப்பான நாள்.


கன்னி

குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடும், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், வழிபாட்டால் குதூகலம் காணும் நாள்.


துலாம்

தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், குடும்ப உறவுகளின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.


விருச்சிகம்

வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


தனுசு

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள்.


மகரம்

எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், தேகநலனில் தெளிவு பிறக்கும், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பயணங்கள் கைகூடும்.


கும்பம்

நண்பர்கள் மனம் கோணாது நடந்து கொள்வது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை.


மீனம்

உறவினர்களின் வழியில் பாராட்டுக்கள் கிடைக்கும், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கனவு பலிதமுண்டு, வழிபாடு ஆனந்தம் தரும், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

மற்றவர்களின் இயல்பான குணத்தோடு அவர்களை ஏற்றுக்கொள்

# விவசாயிகளுக்கு எனது ஆட்சியில் எந்தப் பாதிப்பும் ஏற்படாது

### முன்னாள் ஜனாதிபதி சிறிசேன

(கொழும்பு)

விவசாயிகளுக்கு தற்போது ஏற்பட்டுள்ள அவல நிலை எதிர்காலத்தில் அமையும் தனது அரசாங்கத்தின் கீழ் மீளவும் ஏற்பட இடமளிக்கப் போவதில்லை என மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் வகையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கருத்து வெளியிட்டுள்ளார்.

போராட்டத்தில் ஈடுபட்டு வரும் விவசாயிகளை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் செவிசாய்க்கவில்லை.

உலகில் எந்த நாடும் 100 சதவீதம் இயற்கை விவசாயத்தைப் பின்பற்றவில்லை.

குறிப்பாக அவுஸ்திரேலியாவில் கூட, 50 சதவீத விவசாயமே இயற்கை முறையிலான விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

### சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த ஒக்டோபர் மாதத்தில் 22 ஆயிரத்து 771 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த செப்டெம்பர் மாதத்தைக் காட்டிலும் 68 சதவீதம் அதிகரித்துள்ளதாக அந்த சபை குறிப்பிட்டுள்ளது. (நி-5)

## மரண அறிவித்தல்

### திருமதி. பெர்னான்டோ மாகிறேற்



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் அளம்பில்- முல்லைத்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட உடையார் அன்ரனி பெர்னான்டோ அவர்களின் பாரியார் பெர்னான்டோ மாகிறேற் அவர்கள் தனது 109 ஆவது வயதில் 02.11.2021 நேற்று முத்தியடைந்தார்.


அன்னாரின் சரீர அடக்க நிகழ்வு 03-11-2021 இன்று காலை 10 மணியளவில் அளம் பில் சேமக்காலையில் நடைபெறும் என்பதைச் சகலருக்கும் அறியத்தருகிறோம்.

தொடர்புகளுக்கு:
F. A.அமலதாஸ்-(மகன்) 0777859035
F.J.சதானந்தம் - (மகன்) 0777882305
S.தேவி- 0775708573

(8475)

தகவல்:
பிள்ளைகள்

# IN MEMORIAM



Born:
23.05.1942

Died:
03.11.1966

## V.T.MAHALINGAM
### Sub-Inspector of Police

"MILLIONS OF ROSES WATERED BY OUR TEARS
BLOOMS IN YOUR MEMORY FOR EVER"

யாழ். இந்துக் கல்லூரியும் யாழ். மத்திய கல்லூரி- பழைய மாணவன், யாழ்.மத்திய கல்லூரி மாணவத் தலைவர், மெய்வல்லுநர் போட்டிகளிலும் துடுப்பாட்டத்திலும் உதைபந்தாட்டத்திலும் சிறந்த வீரராகத் திகழ்ந்தார். 1963 இல் யாழ். பாடசாலைகள் இணைந்த துடுப்பாட்டக்குழுவுக்கு தலைமை தாங்கி கொழும்பு பாடசாலைகளின் இணைந்த துடுப்பாட்டக் குழுக்களுக்கு எதிராக அந்தப் போட்டியில் கூடிய ஓட்டங்களைப் பெற்று (எழுபது) பந்துவீச்சில் கூடிய 11 (6+5) விக்கெட்டுக்களை வீழ்த்திய பெருமையும் இவரைச் சார்ந்தது. அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டியில் உயரம் பாய்தலிலும் நீளம் பாய்தலிலும் முதலிடம் பெற்றார். இலங்கை மெய்வல்லுநர் சங்கம் நடத்திய தேசிய மெய்வல்லுநர் போட்டியில் 1964 ஆம், 1965 இலும் உயரம் பாய்தலிலும் நீளம் பாய்தலிலும் முதலாம் இடம்பெற்று விளங்கினார். அரசாங்கத் திணைக்களங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் உயரம் பாய்தலிலும் நீளம் பாய்தலிலும் முதலிடம் பெற்றார்.

16/4, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(8409)

இவரின் மறைவினால் துயருறும்
V.T. லிங்கம்ஸ் குடும்பத்தினர்

# கீரிமலையில் காணி சுவீகரிப்பு
# கடும் எதிர்ப்பால் தடுத்து நிறுத்தம்

(குப்பிழான்)

**யாழ்.கீரிமலையில் கடற்படையின் தேவைகளுக்காகத் தமிழ் மக்களுக்கு சொந்தமான தனியார் காணிகளைச் சுவீகரிப்பதற்கு நேற்றுச் செவ்வாய்க் கிழமை அளவீட்டுப் பணிகள் இடம்பெறவிருந்த நிலையில் குறித்த முயற்சி பொதுமக்கள் மற்றும் அரசியல்வாதிகளின் கடும் எதிர்ப்பால் தடுத்து நிறுத்தப்பட்டது.**

உயர்பாதுகாப்பு வலயத்தில் கீரிமலை நகுலேஸ்வரம் ஜே/226 கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள காணிகளில் ஒரு பகுதியை அளவீடு செய்வதற்காக நேற்று நில அளவைத் திணைக்கள அதிகாரி உள்ளிட்ட குழுவினர் மேற்படி பகுதிக்கு வருகை தந்தனர். எனினும், காணி உரிமையாளர்களின் ஒப்புதல் இல்லாமல் குறித்த அளவீட்டுப் பணிகள் இடம்பெறுவதற்கு அங்கு கூடிய காணி உரிமையாளர்கள் மற்றும் அரசியல் வாதிகள் கடும் எதிர்ப்பு வெளியிட்டனர்.

எனினும், நில அளவைத் திணைக்களத்தினர் வேறொரு பகுதி ஊடாகச் சென்று காணிகள் சுவீகரிப்பதற்காக அளவீடு செய்ய முயன்றபோது அவர்கள் வந்த வாகனத்தை அங்கிருந்து செல்ல முடியாதவாறு தடுத்து நிறுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்பின்னர் குறித்த காணிகளின் அளவீடுகள், கல் நாட்டுதல் போன்ற நடவடிக்கைகளுக்கு காணி உரிமையாளர்கள் சம்மதம் தெரிவிக்கவில்லை. பொதுமக்களுக்கு இந்த வியத்தில் கடுமையான ஆட்சேபனைகள் உள்ளமையால் குறித்த நடவடிக்கைகளைக் கைவிடுமாறு வலியுறுத்திஅங்கு வந்த காணி உரிமையாளர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் கையொப்பங்களுடன் யாழ். மாவட்ட நில அளவைத் திணைக்கள அத்தியட்சகருக்கான கடிதம் அளவீடு செய்வதற்காக வருகை தந்த நில அளவைத் திணைக்கள அதிகாரியிடம் கையளிக்கப்பட்டது.



கடிதத்தைப் பெற்றுக்கொண்ட அதிகாரி குறித்த அளவீட்டு நடவடிக்கையைத் தற்காலிகமாக கைவிட்டு வருமாறு மேலதிகாரிகள் தெரிவித்துள்ளதாக கூறினார். நில அளவைத் திணைக்களத்தினர் அங்கிருந்து சென்றதையடுத்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவர்களும் கலைந்து சென்றனர். (4-5-18-33-104)

## அன்டிஜனில் நால்வருக்கு தொற்று

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை சிகிச்சை பெற வந்த நால்வருக்கு அன்டிஜன் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப் படுத்தப்பட்டது.

நோய் அறிகுறிகளுடன் வைத்தியசாலைக்கு வந்த ஆசிரியர், வியாபாரி உள்ளிட்டவர்களுக்கே இவ்வாறு தொற்று உறுதியான நிலையில் வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (4-5-30)

## நூல் கண்காட்சி

(குப்பிழான்)

இவ்வாண்டின் தேசிய வாசிப்பு மாத தாரக மந்திரத்தை நாடெங்கும் அறியச் செய்யும் வகையில் "தொலைதூர வாசிப்பு" எனும் தொனிப் பொருளிலான நூல் கண்காட்சி நாளை மறுதினம் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரை சுன்னாகம் பொது நூலகத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி மூன்று தினங்களிலும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை குறித்த கண்காட்சி நடைபெறும். (4-5-18)

## 109 வயது மூதாட்டி காலமானார்



(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் அளம்பில் முல்லைத்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட பேர்னான்டோ மாகிறேற் எனும் மூதாட்டி தனது 109 ஆவது வயதில் நேற்று இயற்கை எய்தினார். (4-5)




## இன்று உர விநியோகம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட எழுது மட்டுவாழ் தெற்கு மற்றும் கரம்பகம் ஆகிய கமக்கார அமைப்பிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு இன்று புதன்கிழமை உரமானியம் வழங்கப்படவுள்ளதாக அமைப்புக்களின் தலைவர் அறிவித்துள்ளார்.

எனவே கமக்கார அமைப்பிற்குட்பட்ட பதிவு செய்த விவசாயிகள் தேசிய அடையாள அட்டை,2021 ஆம் ஆண்டிற்கான வரி செலுத்திய பற்றுச்சீட்டு, 2020 ஆம் ஆண்டு இலவச உரமானியம் பெற்றமைக்கான பற்றுச்சீட்டு ஆகியனவற்றுடன் சாவகச்சேரி கமநல சேவை நிலையத்திற்கு (புத்தூர்ச்சந்தி) வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (4-5-30)

## யாழ்.மாவட்டத்தில் மின்சார இணைப்பின்றி 3700 குடும்பங்கள்

### மேலதிக அரசாங்க அதிபர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மக்கள் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட மின்சார பாவனையாளர்களின் பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபனின் தலைமையில் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.



குறித்த கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்தில் மின்சார பாவனையாளர்கள் மின்சார விநியோகம் தொடர்பில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அவற்றைத் தீர்ப்பது தொடர்பில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பிரதிப் பணிப்பாளரால் விளக்கமளிக்கப்பட்டது.

குறிப்பாக மின்சார பாவனையாளர் புதிய மின்சார இணைப்பு பெறல், மின்சாரக்கட்டண அறவீட்டுப் பிரச்சனை, மின்சார பட்டியல் பிரச்சனை, மின்சார கணக்கில் பெயர் மாற்றம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

இப்பிரச்சினைகள் தொடர்பாக இலங்கை மின்சார சபை மற்றும் மின் பாவனையாளர்களிடையே இணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்படவுள்ள நடமாடும் சேவையில் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு எட்டப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், யாழ். மாவட்ட செயலக தரவுகளின்படி தற்போது வரை மின்சாரம் பெற்றுக் கொள்ளாத 3700 குடும்பங்களுக்கும் குறித்த நடமாடும் சேவையின் மூலம் மின்சார இணைப்பை பெற்றுக் கொடுப்பதற்குரிய ஏற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பில் சாதகமாக பரிசீலிக்குமாறு தெரிவித்தார்.

மேலும் மின்சார பாவனையாளர்கள் தமது பிரச்சினைகளை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள படிவத்தை பூர்த்தி செய்து உரிய காலப் பகுதிக்குள் தத்தமது கிராம உத்தியோகத்தர்களிடம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் அவை தொடர்பில் ஆணைக்குழுவால் ஏற்பாடு செய்யப்படவுள்ள நடமாடும் சேவையின் மூலம் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார். (4-5-18-33)

## யாழில் பல இடங்களை நேரில் சென்று பார்வையிட்ட ஆளுநர்



(யாழ்ப்பாணம்)

வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா யாழ்.மாவட்டத்திலுள்ள பல்வேறு இடங்களை நேரில் சென்று பார்வையிட்டார். பயணக்கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ள நிலையில் கொரோனா தொற்று பாதுகாப்பு நடவடிக்கைகள், ஏனைய அபிருத்தி நடவடிக்கைகள், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், யாழ்.பிரதேச செயலர் மற்றும் அரச கிராம உத்தியோகத்தர்களுடன் நிலைமை குறித்து கலந்துரையாடினார். (4-5-33)

# சினோபார்ம் தடுப்பூசி பெற்றவர்களுக்கு மூன்றாம் கட்ட தடுப்பூசி அவசியம்

## மருத்துவ நிபுணர் ரஜீவ் டி சில்வா

(கொழும்பு)

**இலங்கையில் உபயோகிக்கப்படுகின்ற கொவிட் தடுப்பூசிகளில் சினோபார்ம் தடுப்பூசியே செயற்றிறன் குறைந்ததாகும். இதன் மூலம் கிடைக்கப்பெறும் பாதுகாப்பு 6 மாதங்களின் பின்னர் குறைவடையத் தொடங்கும் என்பது ஆய்வுகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.**

எனவே சினோபார்ம் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு துரிதமாக மூன்றாம் கட்ட தடுப்பூசி வழங்கப்பட வேண்டும் என்று விசேட மருத்துவ நிபுணர் ரஜீவ் டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள இலங்கை மருத்துவ சங்க தலைமையகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

வெளிநாட்டலுவல்களின் தரவுகள் மற்றும் பேராசிரியர் நீலிகா மலவிகேவினுடைய ஆய்வுகளின் அடிப்படையில் சினோபார்ம் தடுப்பூசி வழங்கப்பட்டு 3 மாதங்களின் பின்னர் அதன் மூலம் கிடைக்கப் பெறும் பாதுகாப்பு குறைவடையும் என்பது தெரிய வந்துள்ளது.

இந் நிலையிலேயே சினோபார்ம் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டுள்ள 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 3 - 6 மாதங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் மூன்றாம் கட்ட தடுப்பூசியை செயலூட்டியாக வழங்குமாறு உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆலோசனைக்குழு பரிந்துரைத்துள்ளது.

இதேவேளை பைசர் மற்றும் அஸ்ட்ராஜெனேகா தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டவர்கள் கொவிட் தொற்றுக்குள்ளாகி, அறிகுறிகள் தென்பட்டாலும் 6 மாத காலத்திற்கு நோய்த்தாக்கத்தின் தீவிர நிலைமையை அடைதல் மற்றும் மரணமடைதல் என்பவற்றிலிருந்து பாதுகாப்புப் பெற முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தரவுகளின் அடிப்படையில் அவதானிக்கும் போது சினோபார்ம் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு மூன்றாம் கட்ட தடுப்பூசி இன்றியமையாததாகும்.

எனவே 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், நோய் எதிர்ப்புச்சக்தி குறைவானவர்களுக்கும் முன்னுரிமையளித்து மூன்றாம் கட்டத் தடுப்பூசியை வழங்குமாறு இலங்கை மருத்துவ சங்கம் பரிந்துரைக்கிறது. காரணம் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டாலும், பெறாவிட்டாலும் கொவிட் தொற்றினால் பாதிப்படையக் கூடிய வாய்ப்புக்கள் இந்த வயது பிரிவினருக்கே அதிகமாகக் காணப்படுகிறது.

முதல் இரு கட்டங்களாக எந்தத் தடுப்பூசியை பெற்றிருந்தாலும் மூன்றாம் கட்டமாக பைசர் அல்லது அஸ்ட்ராஜெனேகா தடுப்பூசியை வழங்குவதன் மூலம் நோய் எதிர்ப்புச் சக்தியின் அளவு மேலும் அதிகரிக்கும் என்று ஆய்வுகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய முதல் இரு கட்டங்களாகவும் சினோபார்ம் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டுள்ளவர்களுக்கு மூன்றாம் கட்டமாக பைசர் தடுப்பூசியை வழங்குவதே மிகப் பொருத்தமானது என அவர் தெரிவித்தார். (நி)

## அதிகரிக்கும் டெங்கு நோயாளர்கள்

# அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவரை நாடுங்கள்

(கொழும்பு)

நாட்டில் கொவிட் பெருந்தொற்றுக்கு இலக்கான நோயாளிகளின் எண்ணிக்கையில் சிறிதளவு வீழ்ச்சி பதிவாகி வரும் நிலையில் டெங்கு நோயாளிகள் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அதன்படி நேற்று முன்தினம் மட்டும் 120 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளனர். கொவிட் தொற்றின் போது தென்படும் காய்ச்சல், தசைவலி உள்ளிட்ட நோய் அறிகுறிகள் டெங்கு நோயாளிகளுக்கும் காணப்படும் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப்பிரிவின் நிபுணத்துவ மருத்துவர் நிமால்கா பானிலா ஹெட்டி தெரிவித்தார்.

நோய் அறிகுறிகள் தென்பட்டால் காலம்தாழ்த்தாது மருத்துவரை அணுகுமாறு அவர் மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இந்த ஆண்டில் இதுவரையில் 22ஆயிரத்து520 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இந்திய மீனவர்களை பார்வையிட அனுமதி

(கரணவாய்)

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை, இந்திய தூதரக அதிகாரிகள் பார்வையிடுவதற்கும் இந்தியாவிலுள்ள உறவினர்களுடன் உரையாடுவதற்கும் பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் கிருசாந்தன் பொன்னுத்துரை நேற்று முன்தினம் திங்கட்கிழமை அனுமதி வழங்கினார்.

கடந்த 14ஆம் திகதி வட க்கு கடற்பரப்பில் கடற்படை யினரால் கைது செய்யப்பட்ட 23 இந்திய மீனவர்களும் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் இவ்வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது மீனவர்கள் சார்பில் சட்டத்தரணி லோ.குகதாசன் ஆஜராகியிருந்தார். அவரின் சமர்ப்பணத்தை ஏற்ற நீதவான் இந்திய தூதரக அதிகாரிகள் மீனவர்களை பார்வையிடுவதற்கும், இந்தியாவில் உள்ள உறவினர்களுடன் தொலைபேசியில் உரையாடுவதற்கும், உடுபுடைவைகள் வழங்குவதற்கும் நீதவான் அனுமதி வழங்கினார். (4-5-60)

# 12-15 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு தடுப்பூசி வழங்கலில் அவதானம் செலுத்தப்படும்

## விசேட வைத்திய நிபுணர்

(கொழும்பு)

12 - 15 வயதுக்கு இடைப்பட்ட மாணவர்களுக்கு தடுப்பூசி வழங்குவது தொடர்பில் அவதானம் செலுத்தப்படும் என்று இலங்கை சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர்கள் அமைப்பின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் ஷாமன் ரஜேந்திரஜித் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள இலங்கை மருத்துவ சங்க தலைமையகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

நாட்டில் விசேட தேவையுடைய 22 ஆயிரம் சிறுவர்களுக்கு முதற்கட்ட தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் இவர்களுக்கான இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

அத்துடன் 16 - 19 வயதுக்கு இடைப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கும் தடுப்பூசி வழங்கும் பணிகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய கடந்த வாரம் வரை 7 இலட்சத்து 26 ஆயிரம் மாணவர்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

இவர்களில் எவருக்கும் பக்க விளைவுகள் பதிவாகவில்லை. இவ்வாறு 1.2 மில்லியன் மாணவர்களுக்கு தடுப்பூசி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இம்மாத இறுதிக்குள் எஞ்சிய மாணவர்களுக்கும் தடுப்பூசியை வழங்கி நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

இவர்களுக்கான இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்கல் தொடர்பில் விசேட வைத்திய நிபுணர்களின் 3 மாத கால மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். அதன் பின்னரே 12 - 15 வயதுக்கு இடைப்பட்ட மாணவர்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்காக சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது.

இது குறித்த ஆலோசனை கிடைக்கப் பெற்ற பின்னரே குறித்த வயது பிரிவினருக்கு எவ்வாறு தடுப்பூசி வழங்கும் பணிகளை முன்னெடுப்பது என்பது தீர்மானிக்கப்படும் என அவர் தெரிவித்தார். (நி-5)


மணிவிழா வாழ்த்து



திருமதி. மகேஸ்வரி ரவீந்திரன்

சேவைக்காலம்

கிளி/பிரமந்தனாறு மகா வித்தியாலயம்
2000.09.22-2007.03.18
கிளி/ மயில்வாகனபுரம் அ.த.க.பாடசாலை
2007.03.19-2014.03.11
கிளி/பிரமந்தனாறு மகா வித்தியாலயம்
2014.09.12-2021.11.03

"ஆரம்பப் பிரிவின் அத்திவாரம் சிறக்கத்
தூர நோக்குடன் துலங்கியதால் மாணவரைத்
தேரில் ஏற்றிய தெவிட்டாத தேன் தமிழே!
சீருடன் சேவையாற்றிச் சிறப்புடன் ஓய்வுபெறும்
தமிழணங்கே! உம் சீர்இளமைத்
திறம் வியந்து வாழ்த்துகின்றோம்"

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம், கிளி/ பிரமந்தனாறு ம.வி.
தர்மபுரம், பரந்தன்.

(8453)

# "எமக்கான கல்லறையை நாமே தோண்டுகின்றோம்"

# ஐ.நா. பொதுச் செயலர் உலக தலைவர்களிடம் தெரிவிப்பு

(ஸ்கொட்லாந்து)


**காலநிலை மாற்றத்திற்கு எதிராக துரிதமாக செயற்படாமையினால் நாம் எமக்கான கல்லறையை தோண்டுகின்றோம் என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டேரஸ் உலக நாடுகளின் தலைவர்களிடம் தெரிவித்தார்.**

ஸ்கொட்லாந்து கிளாஸ் கோவில் ஆரம்பமான, கோப் - 26 ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றத்திற்கான 26 ஆவது மாநாட்டில் உரையாற்றும் போது அவர் இதனைச் சுட்டிக்காட்டினார்.

சுமார் 200 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ள நிலையில் தாம்மேற்கொள்ளும் "அழிவுகளுக்கு எதிரான நடவடிக்கை" களுக்காக அபிவிருத்தியடைந்த நாடுகள் உறுதியளித்த உதவித் தொகையை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு வழங்க வேண்டும் என அந்த நாடுகள் கேட்டுக் கொண்டன.

அத்தோடு சிறிய தீவு நாடுகள் "திகிலூட்டும்" தாக்கங்களை எதிர்கொள்வதாக அச்சம் வெளியிட்டுள்ளன.

உலக வெப்பமயமாதலை தடுக்கும் அல்லது குறைக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கருப்பொருளில் இந்த மாநாடு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)



# 21 மாடிக் கட்டடம் இடிந்து விழுந்து பலர் உயிரிழப்பு

## இதுவரை 6 பேரின் சடலங்கள் மீட்பு



(நைஜர்)

நைஜீரியாவின் லாகோஸ் நகரில் நேற்று 21 மாடி கட்டடம் இடிந்து விழுந்ததில் இதுவரை 6 பேர் உயிரிழந்ததாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.


மேற்படி கட்டடம் கட்டப்பட்டுக் கொண்டிருந்ததாகவும், இடிந்து விழும் போது சுமார் 50 பேர் உள்ளே இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இகோய் மாவட்டத்தில் உள்ள ஜெரார்ட் சாலையில் அமைந்துள்ள 21 மாடிக் கட்டடமே இடிந்து வீழ்ந்தது.

இடிந்து விழுந்த கட்டடத்தின் உரிமையாளருக்கு 15 மாடிகளைக் கொண்ட கட்டடத்தை கட்டுவதற்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டிருந்ததாக உள்ளூர் ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

எவ்வாறெனினும் தற்சமயம் இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# சீனாவை எச்சரிக்கும் வகையில் இந்தியா போர்பயிற்சி



(பீஜிங்)

சீனாவை எச்சரிக்கும் விதமாக லடாக்கின் கிழக்கு பகுதியில் இந்திய விமானப் படையினர் போர் ஒத்திகை செய்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

நூற்றுக்கணக்கான வீரர்கள் பங்கேற்ற இந்த போர் ஒத்திகை கடந்த மூன்று நாட்களாக நடத்தப்பட்டுள்ளது.

அதேநேரம் இந்த ஒத்திகையில் சி130 ஜே சூப்பர் மற்றும் ஏஎன் 32 ரக விமானங்கள் பங்கேற் றன. (நி-5)

# கமலஹாசனின் பிறந்த நாளையொட்டி 7 இலட்சம் பேருக்கு அன்னதானம்

(சென்னை)

'நம்மவரின் ஐயமிட்டு உண்' என்ற பெயரில் 7 இலட்சம் பேருக்கு அன்னதானம் வழங்கும் திட்டத்தை கமலஹாசன் நேற்று முன்தினம் தொடக்கி வைத்தார்.

மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமலஹாசனுக்கு எதிர்வரும் 7 ஆம் திகதி 67 ஆவது பிறந்தநாள் ஆகும்.

இதனை சிறப்பாக கொண்டாட மக்கள் நீதி மய்யம் கட்சியினர் முடிவு செய்துள்ளனர்.

இதையொட்டி நவம்பர் முதலாம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை தமிழகம் முழுவதும் 7 இலட்சம் பேருக்கு அன்னதானம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்துக்கு 'நம்மவரின் ஐயமிட்டு உண்' என்று பெயரிடப்பட்டுள்ளது. (நி-5)

# சீனாவின் மற்றுமொரு ஏவுகணைத் தளம் உலக நாடுகளுக்கு எச்சரிக்கை மணி

(பீஜிங்)

தற்போதுள்ள ஏவுகணைத் தளங்களைத் தவிர மேலும் மூன்று மூலோபாய ரீதியாக முக்கியமான இடங்களில் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை தளங்களை சீனா நிர்மாணித்து வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உலகிற்கு அச்சுறுத்தலாகும் வகையில் சீனா இத் தளங்களை நிர்மாணித்து வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அணு ஆயுதங்களை விநியோகித்தல் மற்றும் 5,500 கி.மீ தூரம் வரை சென்று தாக்கும் ஏவுகணையான சிலோ அடிப்படையிலான ஐ.சி.பி.எம் என்ற ஏவுகணையின் வளர்ச்சியாக இந்த தளங்கள் அமைகின்றன.

உலக பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் "ஆயுதப் போட்டியைத் தூண்டும்" சாத்தியம் இருப்பதாகவும் சீனாவின் வளர்ச்சிகளைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டிய அவசியமாக உள்ளது என பன்னாட்டு அமைப்புகள் எச்சரித்துள்ளன. (நி-5)

# சுகாதார நிலைமையை உணர்ந்து பண்டிகைக் காலங்களில் செயற்படுங்கள்

## கிளிநொச்சி சுகாதார பணிப்பாளர்

(முறிகண்டி)

**கிளிநொச்சியில் நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்ட 20 தொற்றாளர்களில் 10 பேர் 16 வயதுக்கு குறைந்த பாடசாலை மாணவர்கள் எனவும், பண்டிகைக் காலத்தில் சுகாதார நிலைமையை உணர்ந்து ஒத்துழைத்து செயற்படுங்கள் என கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சரவணபவன் தெரிவித்தார்.**

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்விடயத்தை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், நேற்று கிளிநொச்சி மாவட்டத்தில் சுகாதார பணியாளர்கள் மற்றும் முன்னணி பணியாளர்களிற்கான மூன்றாம் கட்டமாக பைசர் தடுப்பூசி வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தடுப்பூசிகளை முழுமையாகப் பெற்றுக்கொண்ட நாடுகளில் மீண்டும் நோய் பரவல் தீவிரம் அடைந்து வருவதை பார்க்கக் கூடியதாக உள்ளது.

தீபாவளியை முன்னிட்டு மக்கள் எந்தவிதக் கட்டுப்பாடுகளும் இல்லாமல் நடமாடுவதை அவதானிக்கின்றோம். கடந்த காலங்களில் டிசெம்பர் புதுவருட காலத்தின் பின்னர் எவ்வாறு தொற்று பரவல் ஏற்பட்டது என்பது மக்கள் அனைவருக்கும் தெரியும்.

கொவிட் மீண்டும் வராது என்று ஒருபோதும் எண்ணாதீர்கள். மீண்டும் வரலாம். பாதிப்புக்களையும் உண்டாக்கலாம். ஆகவே, இனி வரும் காலங்கள் ஒன்றுகூடல்களைத் தவிர்த்து தொற்று பரவலைக் கட்டுப்படுத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (4-5-100)

# பேருந்து சேவையை அதிகப்படுத்துங்கள் நாச்சிக்குடா மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி நாச்சிக்குடா கிராமத்திற்கு மேலும் பேருந்து சேவைகள் இடம்பெற வேண்டும் என அக்கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

954 குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் காலை 7.30 மணிக்கு யாழ்ப்பாணத்தினை நோக்கி பயணிக்கும் தனியார் பேருந்து மாலை 4.30 மணிக்கே நாச்சிக்குடாவுக்கு திரும்புவதாகவும் இடைப்பட்ட நேரத்தில் இக்கிராம மக்கள் போக்குவரத்துக்கு பெரும் நெருக்கடியை எதிர்கொள்கின்றனர்.

முழங்காவில் ஆதார வைத்தியசாலைக்குச் செல்லும் மக்களும் முழங்காவில் மகாவித்தியாலயத்திற்குச் செல்லும் மாணவர்களும் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொள்கின்றனர்.

அதிக குடும்பங்கள் வாழ்கின்ற இக்கிராமத்தில் பேருந்து சேவை கூடுதலாக இடம்பெறுமானால் போக்குவரத்து நெருக்கடி ஏற்படாது.

எனவே நாச்சிக்குடா கிராமத்திற்கு மேலும் பேருந்து சேவைகள் இடம்பெற வேண்டும் எனவும் கிளிநொச்சியில் இருந்து முழங்காவில் வரும் இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகள் இரணைமாதாநகர், நாச்சிக்குடா கிராமங்களுக்கும் சேவை வழங்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(4-5-350)

# இரணைதீவில் கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்த நடவடிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி இரணைதீவில் கட்டாக்காலி நாய்களின் அதிகரிப்பை கட்டுப்படுத்துவதற்கு பிரதேச சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பூநகரி பிரதேச சபையின் உப தவிசாளர் மு.எமிலியாம் பிள்ளை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, இரணைதீவில் கட்டாக்காலி நாய்களின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. நாய்களினால் கால்நடைகள் அழிக்கப்படுவதன் காரணமாக இம்முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

கடற்படையினர் நாய்களை இரணைதீவில் இருந்து வெளியிடங்களுக்குக் கொண்டு செல்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இரணைதீவில் அனைத்து கால்நடைகளையும் ஓரிடத்தில் இணைத்து கால்நடை பண்ணை அமைப்பதற்கு எதிர்வரும் ஆண்டில் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கும் ஒதுக்கப்பட உள்ள ரூபாய் மூன்று மில்லியனில் இருந்து நிதியினைப் பெற்று நடவடிக்கையினை மேற்கொள்வது எனவும் திட்டமிடப்பட்டுள்ளது.

1992 ஆம் ஆண்டு இரணைதீவில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்த பின்னர் கால்நடைகள் பராமரிப்பின்றி காணப்படுகின்றன எனவும் உப தவிசாளர் தெரிவித்தார்.

(4-5-350)

# வெள்ள அனர்த்தத்தை தடுக்க குளங்களை ஆழப்படுத்துங்கள்

(சாவகச்சேரி)


சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட குளங்களை ஆழப்படுத்தி வாய்க்கால் அமைப்பை சீர் செய்து வருடா வருடம் ஏற்படும் வெள்ள அபாயத்தினைத் தீர்க்க நகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டுமென சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நகரசபை எல்லைக்குட்பட்ட கண்டுவில் குளம், கற்குழிக் குளம் மற்றும் உப்புக்கேணிக் குளம் ஆகியன ஆழப்படுத்த வேண்டிய தேவைப்பாட்டில் உள்ளன. குறிப்பாக மாரிகாலத்தில் கண்டுவில் குளம் நிறைந்து அருகில் உள்ள குடிமனைகள் பாரிய வெள்ள அபாயத்தை எதிர்கொள்கின்றன.

அத்துடன் கோவிற் குடியிருப்பு வட்டாரத்தில் வீதியோரமாக உள்ள உப்புக்கேணிக் குளம் எல்லைச் சுவர் கூட அற்ற நிலையில் பாதுகாப்பற்றுக் காணப்படுகிறது. மேலும் கண்டுவில் குளத்தில் இருந்து இல்வாரைக் குளம் வரை வாய்க்கால் அமைப்பு எதுவும் இல்லாத நிலையில் அதனை நகர சபையினர் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி உரிய முறையில் வாய்க்கால் அமைப்பினை ஏற்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார். (4-5-30)

# கடும் மழை காரணமாக சிற்றாலயம் சேதம்



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக பல கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன. இந்நிலையில் நேற்று முன்தினம் பெய்த கடும் மழை காரணமாக சாந்திபுரம் பகுதியில் உள்ள சிற்றாலயம் முழுமையாக சேதம் அடைந்துள்ளது.

சிற்றாலயத்தின் கூரை பகுதி இடிந்து ஆலயத்தினுள் வீழ்ந்துள்ளது. தொடர்ச்சியாக மழை பெய்து வருவதனாலும் சிற்றாலையத்தை சூழ நீர் நிறைந்துள்ளமையினாலும் சிதைவுகளை அகற்ற முடியாத நிலை காணப்படுகின்றது. (4-5-285)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 170 | 150 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 150 | 160 | 160 | 160 |
| பச்சைமிளகாய் | 140 | 100 | 140 | 160 |
| தக்காளி | 250 | 350 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 40 |
| கோவா | 150 | 130 | 160 | 200 |
| கரட் | 140 | 260 | 240 | 240 |
| பூசணி | 60 | 50 | 60 | 60 |
| புடோல் | 230 | 200 | 160 | 160 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 200 | 240 | 300 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 200 | 240 |
| பாகற்காய் | 350 | 500 | 350 | 400 |
| வெண்டிக்காய் | 140 | 120 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 160 |
| பயற்றங்காய் | 400 | 400 | 360 | 400 |
| லீக்ஸ் | 200 | 240 | 240 | 280 |
| பீற்றூட் | 100 | 60 | 60 | 80 |
| கறிமிளகாய் | 250 | 350 | 320 | 320 |
| முருங்கைக்காய் | 200 | 180 | 150 | 260 |
| போஞ்சி | 350 | 240 | 320 | 280 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | — | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 60 | 80 |
| தேசிக்காய் | 500 | 450 | 450 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 65 | 70 | 50-80 |
| இராசவள்ளி | 250 | 250 | 250 | 280 |
| வெங்காயப்பூ | — | 300 | — | 300 |
| முள்ளங்கி | 140 | 120 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 45 | 50 | 30 |
| வல்லாரை | 20 | 100 | 20 | 20 |
| ஈரப்பலா | — | — | — | 120 |

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## வேலுப்பிள்ளை தில்லையம்பலம்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1949 | 2021 |
| 06 | 10 |
| 24 | 05 |



## தில்லையம்பலம் ராஜசுலோசனா

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1958 | 2021 |
| 09 | 09 |
| 09 | 21 |

ஈருடலும் ஒருயிரும் என்றே இனிதாய் வாழ்ந்தீர்
இறையடி சேரவும் இணைந்தே போனீர்- ஏக்கம்
தீரவில்லை என்ன பாவம் செய்தோம் அப்பா
ஏங்கியே அழுகின்றோம் எழுந்து வரமாட்டீரோ!

ஏர் பிடித்த உன் கையும் ஊர் முழுக்க ஒலித்த
உன் தேன் மதுரக் குரலும் ஓய்ந்து தான் போனதுவோ
கூறைப்பட்டுச் சேலைகட்டி கூடவே திரிந்தது போல்
உற்ற உன் துணையை உன்னுடனே அழைத்தாளோ அம்மா!

ஊரெல்லாம் கூடி நிற்க சோதரர்கள் சோகமாய்
கதறியழ நீங்கள் பெற்ற பிள்ளைகள் நாம்
அநாதரவாய் நிற்கின்றோம்- போன திசை தெரியலையே
வீடு வந்து சேர்வீரோ விம்மியே அழுகின்றோம்!

(C-2934)

எமது குடும்பத்தின் குலவிளக்குகளாய்த் திகழ்ந்த எமது ஆருயிர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 04.11.2021 வியாழக்கிழமை காலை .6.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று சந்நிதி தீர்த்தக் கரையில் அஸ்தி கரைக்கப்படும்.

இந்த அழைப்பினை ஏற்றுக்கொள்வதுடன் அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்போடு அழைக்கின்றோம்.

சீலாப்புலம்,
கெருடாவில் தெற்கு,
தொண்டைமானாறு.

தகவல்:குடும்பத்தினர்
சாந்தன்-0770237866
சசி-0772255370
ரூபன் (லண்டன்)-0044 79838 7624

# நீண்டகால கொவிட் அறிகுறிகளால் பாதிக்கப்படும் குழந்தைகள்

## குழந்தைகள் நல மருத்துவக் கல்லூரி பேராசிரியர் எச்சரிக்கை

(கொழும்பு)

**கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் நீண்ட கொவிட் அறிகுறிகளால் பாதிக்கப்பட்டுள்ளனர் என குழந்தைகள் நல மருத்துவக் கல்லூரியின் பேராசிரியர் குவானி லியனகே எச்சரிக்கை விடுத்தார்.**

சுகாதார ஊக்குவிப்பு பணியகத்தில் ஊடகவியலாளர்களிடம் பேசிய போது இவ்வாறு குறிப்பிட்டுட்டார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

"பெரியவர்களிடையே நீண்டகால கொவிட் பாதிப்பு அதிகமானதாக இருந்தாலும், குழந்தைகளும் பாதிக்கப்படலாம். தற்போது, இலங்கையில் சரியான புள்ளிவிபரங்கள் இல்லை. எனினும், வைரஸ் தொற்றிலிருந்து மீண்ட பிறகு சுட்டிக் காட்டக்கூடிய 200 இற்கும் மேற்பட்ட அறிகுறிகள் உள்ளன.

அவற்றில் இருமல், சுவாசிப்பதில் சிரமம், தலைவலி, சோம்பல் மற்றும் ஆர்வமின்மை ஆகியவை அடங்கும். மூன்றாவது அலையின் போது அதிக எண்ணிக்கையிலான குழந்தைகள் கொவிட் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, வைரஸின் நீண்டகால அறிகுறிகளுடன் கூடிய குழந்தைகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம். அவர்கள் கல்வி நடவடிக்கைகளில் குறைவான உற்சாகத்துடன் காணப்படலாம்.

பெற்றோர்களைப் போலவே, ஆசிரியர்களும் குழந்தைகள் மீது அவதானமாக இருக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

# கம்மன்பிலவின் அமைச்சுப் பதவியை பறிக்குமாறு பிரதமரிடம் கோரிக்கை

(கொழும்பு)

உதய கம்மன்பிலவின் அமைச்சுப் பதவியை உடனடியாக பறிக்குமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் மூத்த உறுப்பினர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் கோரிக்கை விடுத்தனர்.

கெரவலப்பிட்டி யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் 40 வீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் அரசின் முடிவையும், "மொட்டு" கட்சியின் தலைவர்களையும் கம்மன்பில கடுமையாக விமர்சித்து வருவதை அடிப்படையாகக் கொண்டே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஸ்கொட்லாந்து சென்றுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பிய பின்னரே இந்த விவகாரம் தொடர்பில் இறுதி முடிவெடுக்கப்படும் எனத் தெரிய வருகிறது. (நி)

# உரம் வழங்கக் கோரி விவசாயிகள் போராட்டம்



(மட்டக்களப்பு)

தூக்குத்தண்டனை கைதிகளுக்கு அவர்களது இறுதி விருப்பத்தினை கேட்கும் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்ற போதிலும், விவசாயிகளுக்கு அந்த சந்தர்ப்பத்தினை ஜனாதிபதி வழங்காதது கவலைக்குரியது என விவசாயிகள் தெரிவித்தனர்.

விவசாய அமைச்சரின் கருத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், உரத்தை வழங்கக் கோரியும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை மட்டக்களப்பு வவுணதீவில் விவசாயிகள் ஆர்ப்பாட்டமொன்றினை முன்னெடுத்தனர். (நி-5)

# 6 கோடி ரூபாவுடன் தப்பிச் சென்ற நிறுவன சாரதி - அதிரடிப் படையினரால் கைது

(ஹற்றன்)

ஏ.ரி.எம். இயந்திரத்தில் பணத்தினை வைபிலிடுவதற்காக தனியார் நிறுவனம் ஒன்றினால் கொண்டுவரப்பட்ட 6 கோடி ரூபாய் பணம் நேற்று முன்தினம் கடத்தப்பட்டுள்ளது.

இச் சம்பவம் குறித்து தெரிய வருவதாவது,

குறித்த தனியார் நிறுவனமொன்றின் அதிகாரி, பாதுகாப்பு அதிகாரி மற்றும் சாரதி ஆகியோர் ஏ.ரி.எம். இயந்திரத்தில் பணத்தை வைப்பிலிடுவதற்காக நேற்று முன்தினம் மதியம் ஹற்றன் வந்தனர்.

அதிகாரியும், பாதுகாப்பு ஊழியரும் வானில் இருந்து இறங்கிய கையோடு, சாரதி வானை செலுத்திக்கொண்டு பணத்துடன் தப்பிச்சென்றுள்ளார். நிறுவனத்தின் அதிகாரியும், பாதுகாப்பு ஊழியரும் அவரை பின்தொடர்ந்துள்ளனர். தலவாக்கலை - லிந்துலை வழியாக அம்பேவல பகுதிக்கு வான் செல்வதை, தொழில் நுட்ப உதவியுடன் கண்டறிந்துள்ளனர். இது தொடர்பில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினருக்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து நுவரெலியா பதுளை பிரதான வீதியில் கெப்பட்டிபொல ரேந்தபொல பகுதியில் வைத்து நுவரெலியா விசேட அதிரடிப்படையினர் வானை வழிமறித்து சாரதியை கைது செய்துள்ளனர்.

பின்னர் சாரதியையும் குறித்த பணத்தொகையையும் வானையும் கெப்பட்டிப்பொல பொலிஸ் நிலையத்தில் வைத்து ஹற்றன் பொலிஸ் நிலையத்திற்கு கையளித்தனர்.

சந்தேக நபரையும், பணத்தொகையையும் பொலிஸார் ஹற்றன் நீதிமன்றத்தில், முன்னிலைப்படுத்தவுள்ளதாக நுவரெலியா விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர். (நி-5)

# இன்று ஒரு தகவல்

## பெண்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் இவை மூன்றும் மனிதனுக்கு முதலில் தேவை.

ஆனால் இந்தக் காலத்துப் பெண்கள் சிலருக்கு இவையெல்லாம் இருந்தால் மட்டும் போதாது.

மற்றவர் தம்மைப்பற்றிப் பெரிதாக எண்ண வேண்டும். அல்லது தம்மைப் பார்த்துப் பொறாமைப்பட வேண்டும் என்றெல்லாம் எண்ணுகிறார்கள்.

சில பெண்கள் தகுதிக்கு மீறி ஆடம்பரமாகத் தோற்றமளிக்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள்.

பொருளாதாரச் சிக்கலை ஏற்படுத்திக் கொண்டு அதில் கிடந்து தவிக்கிறார்கள். தான் அழகாக இருக்க வேண்டும் என்று எண்ணுவதில் தவறேதும் இல்லை. அதற்காகச் சக்திக்கு மீறிய ஆடம்பரப் பொருட்களை வாங்கி பணத்தை வீணாக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

நிறையத் தங்க நகைகளையும் வைர அணிகலன்களையும் கொண்டு தான் சிறப்பாகத் தோற்றமளிக்க முடியும் என்றெண்ணுவது தவறு.

எளிய உடையிலும் அலங்காரத்திலும் கூட அழகாகத் தோற்றமளிக்க முடியும் என்கிற உண்மை ஏனோ சிலருக்குத் தெரியமாட்டேன் என்கிறது.

திருமணமாகாத நிலையில் தந்தையும், திருமணமாகி விட்ட நிலையில் கணவனையும் வயதாகி விட்ட காலத்தில் மகனையும் நம்பி வாழ வேண்டியவர்கள் பெண்கள். இவர்கள் இத்தகைய நிலையில் ஆண்களை அனுசரித்துப் போக வேண்டும். இல்லையென்றால் மன அமைதி கிடைக்காது.

எத்தகைய துன்பமான நேரங்களிலும் துன்பத்தை வெளிக்காட்ட முடியாமல் புன்முறுவலோடு இருக்கும் மனப்பக்குவத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு செயலிலும் அன்பும் பாசமும் வெளிப்படும் படி நடந்து கொள்ள வேண்டும்.

பிள்ளைகளை நன்கு படிக்க வைக்கவும் அவர்கள் சுத்தமாக இருக்கவும் உதவ வேண்டும். எத்தகைய குடும்பப் பொறுப்புக்கள் மீதும் சலிப்புக் கொள்ளாமல் உற்சாகத்துடன் அவற்றை செய்து முடிக்க வேண்டும்.


எத்தகைய எதிர்பாராத இடையூறுகளும் அதிர்ச்சிகளும் வந்தால் கூட சட்டென்று அவற்றை சமாளிக்கும் திறமையையும் மனப்பக்குவத்தையும் முயன்று பெற வேண்டும். இவற்றையெல்லாம் வெற்றி பெற்றால் பெண்கள் மற்றவர்களுக்குக் கண்கள்.

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

## புத்திசாலி ஆட்டுக்குட்டி



அந்த அடர்ந்த காட்டில் நரி, ஓநாய், சிங்கம், கரடி என ஏராளமான மிருகங்கள் வாழ்ந்து வந்தன.

எல்லா மிருகங்களும் நன்கு கொழுத்த உடலோடு நடமாடிக்கொண்டிருந்தன. அதற்கு காரணமும் உண்டு.

அந்தக் காட்டை ஒட்டியுள்ள சிறு கிராமத்தில் முத்துசாமி என்ற ஏழை வாழ்ந்து வந்தான்.

அவனது ஆட்டுக்குட்டிகள் துள்ளி விளையாடி மேய்ந்துகொண்டே வழி தவறி காட்டுக்குள் வந்து விடும். அவ்வளவுதான் உடனே அதை காலிசெய்து விடும் இந்த மிருகங்கள்.

முத்துசாமி தனது தந்தை தனக்காக சொந்தமாகக் கொடுத்த நாற்பது ஆடுகளையும் ஒவ்வொன்றாக இழந்து கொண்டிருந்தான்.

இப்போது மொத்தம் பன்னிரெண்டு ஆடுகளே மிஞ்சியிருந்தன. இதனால் முத்துசாமி மிகுந்த வேதனை அடைந்தான்.

சாப்பிடக்கூட மனமில்லாமல் துவண்டு போய் ஆடுகளை அடைத்து வைத்திருந்த பட்டியின் அருகில் படுத்து விட்டான்.

'கண்ணுங்களா! நீங்களாவது என்னை விட்டு போயிடாம பத்திரமாக இருங்கப்பா. என்கண்ணைத் தப்பி வெளியே போயிடாதீங்க.

அவ்வளவுதான் அந்தக் கொடிய மிருகங்கள் உங்க எலும்பைக் கூட விட்டுவைக்காதுங்க. அதனால பாதுகாப்பா இங்கேயே இருங்கப்பா. என்னை மேலும் மேலும் வேதனைப்படவைக்காதீங்க' என்றபடியே தரையில் படுத்து சற்று நேரத்தில் தூங்கியும் விட்டான்.

அவன் பேசியதை கேட்டுக் கொண்டிருந்த ஆடுகள் முத்துசாமியின் நிலையைக் கண்டு மனம் வருந்தின. தங்களை வளர்த்து ஆளாக்கியவன் துன்பத்தை அவைகளால் தாங்க முடியவில்லை.

அவனுக்கு தங்களால் எந்த உதவியும் செய்ய முடியவில்லையே என வேதனைப்பட்டன. அப்போது அந்தக் கூட்டத்தில் இருந்த ஆடு ஒன்று தன் அம்மாவிடம் "அம்மா! எத்தனை நாள்தான்நாம் ஓடியாடி விளையாட முடியாமல் நம் விருப்பத்திற்கு புற்களை மேயாமல் இப்படி பட்டிக்குள்ளேயே அடைந்து கிடப்பது.

இதற்கு ஒரு முடிவு கட்டவேண்டாமா" என்றது. தாய் ஆடு தனது பிள்ளையை பரிவோடு நக்கியது. "மகனே! உன் கவலை எனக்கு புரிகிறது. ஆனால்இதுதானே நமக்கு பாதுகாப்பு வளையம்.

இதைத் தாண்டிப் போன நம் உறவினர்களின் நிலை என்னவாயிற்று என்பதுதான் உனக்குத் தெரியுமே. தெரிந்தும் நீ வெளியே செல்ல ஆசைப்படலாமா.

பாவம் நம் எஜமானர் நம்மில் பாதிக்கு மேல் இழந்து தவிக்கிறார். அவருக்கு நாம் எந்த கஷ்டத்தையும் கொடுக்கக்கூடாது.

(தொடரும்)

# மகாபாரதம்




அறிவாளிகள் அதிகம் பாசம் கொள்ளாத காரணத்தால் துன்பமுறுவதில்லை.

மேலும் அறிஞர்கள் தீய நெறியிலிருந்தும், அவமரியாதை உள்ள இடத்திலிருந்தும் விலகியே இருப்பர். ஆதலால் நான் வேறு இட செல்கிறேன்.

இங்கு இருக்க எனக்கு விருப்பமில்லை" என்று கூறி அப்பறவை மன்னனிடம் அனுமதி பெற்றுப் பறந்து சென்றது.

**பலமுள்ள பகைவன் விரோதமானால்**

தருமர் பீஷ்மரிடம் "பலமுள்ள பகைவனிடம் விரோதம் கொண்டால், எப்படி நடந்து கொள்ள வேண்டும்? என வினவ, பீஷ்மர், இரு இலவ மரத்திற்கும், நாரதருக்கும் நடந்த உரையாடலை எடுத்துக் காட்டாக சொல்ல ஆரம்பித்தார்.

முதலில் பீஷ்மர் இமய மலைக்கும், காற்றுக்கும் நடந்த உரையாடலை விளக்கினார்.

"இமயமலையில் மிகப் பெரிய இலவ மரம் ஒன்று இருந்தது.

அது பருத்த அடிமரத்தையும், நிறைந்த கிளைகளையும், தழைத்த இலைகளையும், உறுதி மிக்க வேர்களையும் கொண்டு இருந்தது.

அம்மரத்தில் பூக்களும், கனிகளும் மிகுதியாக இருந்தன. அவற்றைத் தின்ன வரும் கிளிகளின் அழகு அனைவரையும் கவரும்.

வழிப் போக்கரும், வணிகரும் அதன் நிழலில் எப்போதும் தங்கி இருப்பர்.ஒரு நாள் நாரதர் அங்கு வந்தார். அதன் தோற்றத்தைக் கண்டு மகிழ்ந்தார்.

அந்த இலவமரத்தை நோக்கி, "அனைவரையும் கவரும்இலவ மரமே! உன்னைக் கண்டு நான் வியப்படைகிறேன். பறவைகளும், விலங்குகளும் உன்னை நாடி வருகின்றன.

பெருங்காற்றுகூட உன்னை ஒன்றும் செய்ய முடியவில்லை. ஒரு கிளை கூட முறிந்ததில்லையே.

வாயு பகவான் உன் நண்பனா? பெரிய பெரிய மலைச் சிகரங்களையும் சிதற அடிக்கும் வாயு உன்னிடம் நெருங்காததற்குக் காரணம் உண்டா? நீ பூத்துக் குலுங்கும் காலத்தில் யானைகள் கூட்டம் கூட்டமாய் மணம் நாடி வருகின்றன.

பல விலங்குகளுக்கு இருப்பிடமான மேரு மலை போல காணப்படுகிறாய்.

முற்றும் துறந்த முனிவர்களும் உன்னை நாடி வருகின்றனர். உனது இடத்தைத் தேவர் உலகத்துக்கு இணையாகக் கருதுகிறேன்" என்று கூறினார்.

(தொடரும்)

> சென்று போன நாட்களைப் பற்றி வருந்தாதீர்கள். எதிர்காலத்தை நினைத்து அஞ்சாதீர்கள். இன்று செய்யப்போகும் காரியத்தில் முனைப்பாயிருங்கள்.
> ~ மார்க்கஸ் அரேலியஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வெல்ல வைத்து கழுத்தறுப்பதும் தோற்கடித்துப் பாதுகாப்பதும்

ஜனாதிபதி கோட்டாபயவின் ஆட்சிக் காலத்தில் பொருட்களின் விலைகள் உயர்வாக இருந்தாலும் ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் நன்கு மலிந்துள்ளன.

ஆசிரியர்களின் போராட்டத்தில் ஆரம்பித்து விவசாயிகள், மின்சார சபையினர் என ஆர்ப்பாட்ட மழை இலங்கையில் கொட்டித் தீர்க்கின்றது.

இஃது ஒருபுறமிருக்க, காணி அபகரிப்புக்கும் காணாமல்போனவர்களுக்குமாக நடக்கின்ற போராட்டங்களும் நீண்டு செல்கின்றன.

நிலைமை இதுவாக இருக்கையில், அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவோம் என எதிர்க்கட்சியினரும் பௌத்த பிக்குகளும் கங்கணம் கட்டி நிற்கின்றனர்.

அத்தியாவசியப் பொருட்கள் உட்பட அனைத்துப் பொருட்களினதும் விலைகள் கண்டபாட்டில் எகிறியுள்ள நிலையில், விவசாயத்துக்குத் தேவையான உரவகைக்கும் மருந்து வகைகளுக்கும் தடைவிதித்துவிட, செய்த விவசாயத்தை என்ன செய்வது? தொடர்ந்து விவசாயம் செய்ய முடியுமா? என்ற எழு வினாவுடன் வீதியில் இறங்கி விவசாயிகள் போராட்டம் நடத்தத் தலைப்பட்டுள்ளனர்.

ஆம், எங்கும் பொருளாதார நெருக்கடி, பஞ்சம், பசி, பட்டினி, உழைக்கின்ற ஊதியம் சீவனோபாயத்துக்கே போதாத பரிதாபம் என்பதாக நிலைமை இருக்கையில்,

ஆளுந்தரப்புக்குள் பிடுங்குப்பாடு வலுவடைந்து வருகிறது.

ஆம், கூட்டுச்சேர்ந்து தேர்தலில் நின்று வெற்றி பெற்ற பின்பு, இதர கட்சிகளின் கருத்துக்களுக்கு இம்மியும் மதிப்பளிக்காமல் பொதுஜன பெரமுன தன்பாட்டில் செயற்படுவதால் கூட்டுச்சேர்ந்த இதர கட்சிகள் மிகப்பெரும் மனக்கிலேசத்துக்கு ஆளாகின்றன.

தங்களின் கருத்துக்களைக் கவனத்தில் எடுக்க வேண்டும் என்று கேட்டால், விருப்பம் இல்லை எனில் வெளியேறலாம் என்பதே பதிலாக இருக்கிறது.

இந்நிலையில் விமல் வீரவன்ச, வாசுதேச நாணயக்கார, சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் அவமானம் தாங்க முடியாமல் என்ன செய்வதென்று தெரியாமல் திக்குமுக்காடுகின்றனர்.

இவ்வாறாக, அனைத்துத் திசைகளில் இருந்தும் மூண்டெழும் அனலை அடக்குவது எங்ஙனம் என்று தெரியாமல் தங்களின் பலவீனங்களை ஏற்றுக்கொள்கின்ற பரிதாப நிலைக்கு ஆட்சியாளர்கள் வந்துள்ளனர்.

எதுஎவ்வாறாயினும், அடுத்துவரும் காலம் இலங்கையில் போராட்டத்துக்கும் ஆர்ப்பாட்டத்துக்கும் குறைவில்லாமல் இருக்கும் என்பதை மட்டும் அறுதியிட்டுக் கூறமுடியும்.

ஒரு கட்டத்தில் ஆட்சியைக் காப்பாற்றுகின்ற தரப்பில் ராஜபக்ஷ குடும்பம் மட்டுமே தனித்து நின்றால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

உண்மை, கவியரசு கண்ணதாசன் கூறியதுபோல, *ஆகுங்காலத்தே அவை அவை ஆகும். போகும் காலத்தே பொன், பொருள், புகழ் எல்லாம் போகும்* என்ற தத்துவம் நிதர்சனமாகப் போகிறது என்பதை ஊகிக்க முடிகிறது.

ஆம், கடவுள் பதவியைக் கொடுத்தும் கழுத்தறுப்பான் பதவியைக் கொடுக்காமல் தவிர்த்தும் பாதுகாப்பான் என்ற மெய்ப்பொருளை ராஜபக்ஷ தரப்பும் சஜித் தரப்பும் அனுபவரீதியாக உணரப்போகின்றன என்பதை மட்டும் இப்போதைக்குக் கூறமுடியும்.

### புலம்பெயர்ந்து முகாம்களில் உள்ள

# இலங்கை தமிழர்களுக்கு புதிய வீடுகள் நிர்மாணிக்கப்படும்

### தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின்

*(சென்னை)*

இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் முதற்கட்டமாக புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில் அடிக்கல் நாட்டப்பட்டது.

நேற்று 3,510 புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்காக, அடிக்கல் நாட்டு விழா வேலூர் - மேல் மொணவூரில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலைய விளையாட்டுத்திடலில் நடைபெற்றது.

தமிழகத்தில் புலம் பெயர்ந்த இலங்கை தமிழர்கள் 106 முகாம்களில் வசிக்கின்றனர். புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு குடிநீர், மின்சாரம் உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகளுடன் கூடிய புதிய குடியிருப்புகள் விரைவில் நிர்மாணிக்கப்படுமென தமிழக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் தமிழக, முகாம்களில் வாழும் 19,046 இலங்கை தமிழர்களின் குடும்பத்தினர் நன்மையடையவுள்ளனர். இதற்காக இந்திய ரூபாவில் 142.16 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார். (ம-3)

# பாரம்பரியமற்ற பாதீடொன்று இம்முறை சமர்ப்பிக்கப்படும்

### ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர

பாரம்பரிய வரவு - செலவுத் திட்டத்துக்கு அப்பால் சென்று புதிய பார்வை மற்றும் திட்டங்களுடனான வரவு - செலவுத் திட்டமொன்று இம்முறை இந்த நாட்டுக்குச் சமர்ப்பிக்கப்படும் என்று தான் எதிர்பார்ப்பதாக, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர தெரிவித்தார்.

பசுமைப் பொருளாதாரம், மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி வலுக்கள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் ஆளுகை போன்ற துறைகளுக்கு இதன்போது முன்னுரிமை அளிக்கப்படும் என்பதோடு, "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தின் கீழ் செயற்பட்டு, நாட்டின் வருமானத்தை அதிகரிப்பது தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்படும் என்றும் செயலாளர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற வீடியோ தொழில்நுட்பத்திலான ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்த ஊடகவியலாளர்கள், பல்வேறு துறைகள் தொடர்பில் எழுப்பிய கேள்விகளுக்கு, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல ஆகியோர் பதிலளித்தனர். (ம-3)

# கொரோனாவால் 10 பேர் மரணம்

(கொழும்பு)

நாட்டில் கோவிட் தொற்றுக்கு உள்ளாகி மேலும் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் [illegible] நாயகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய நாட்டில் இதுவரை கோவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 13,770 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

# நாட்டை விட்டு வெளியேறும் இளைஞர்களை அழைத்து வாருங்கள்

### பெரமுன கூட்டத்தில் பிரதமர்

ஒரு கட்சியின் பிரபல்யம் ஆட்சி அதிகாரத்தால் அல்ல அரசியல் செயற்பாடுகளினாலேயேதக்க வைக்கப்படுகிறது என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா நேற்று கொழும்பு தாமரை தடாகத்தில் நடைபெற்றது.

இந்த ஆண்டு நிறைவு விழாவில் பிரதமர் பங்கேற்று உரையாற்றும் போதே இதைக் குறிப்பிட்டார். தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரச நிறுவனங்கள் அரசாங்கத்துடன் செயற்படுவது போன்று மக்கள் மத்தியிலும் அரசியலை முன்னெடுக்க வேண்டும்.

இன்று நாட்டை விட்டு வெளியேறும் நோக்குடன் கடவுச்சீட்டு பெற வரிசையில் இளைஞர்கள் இருக்கிறார்கள்.

நீங்கள் அந்த வரிசையில் இருந்தால், அவர்களை மீண்டும் இந்த நாட்டுக்கு அழைத்து வரும் வகையில் அரசியலில் ஈடுபடுங்கள் என்றார். (ம-3)

# விசேட பூஜை

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை வட கிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் தீபாவளியை முன்னிட்டு நாளை 4 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு விசேட பூஜையும் ஸ்கந்த ஷஷ்டி விரதத்தை முன்னிட்டு 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் தினமும் மாலை 4 மணிக்கு அபிஷேகத்துடன் பூஜை ஆரம்பமாகும்.


சதுர்த்தி உற்சவத்தை முன்னிட்டு 8 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டப் பூஜை என்பன இடம் பெற்று விநாயகப்பெருமானும் முருகப்பெருமானும் திருவீதி வலம் வருகின்ற காட்சியும் இடம் பெறும். (ம-3)

### வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2021

**"எவரொருவர் மரங்களை நாட்டுகின்றாரோ, அவர் தன்னைவிட மற்றவர்களை அதிகம் நேசிப்பவராவார்."**

**-தோமஸ் ஃபுல்லர் (இங்கிலாந்து வரலாற்றாளர்)**

# ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



## குருவும் சீடரும்

சிறுவர்கள் தன்னைத் தரையில் அடித்தது அப்போதுதான் பாம்பின் நினைவிற்கு வந்தது. குருநாதா, இப்போது என் நினைவுக்கு வருகிறது. ஒருநாள் இந்த மாடு மேய்க்கும் சிறுவர்கள் என்னைத் தரையில் சுழற்றி அடித்தார்கள். அவர்கள் அறியா சிறுவர்கள். என் மனநிலை அவர்களுக்குத் தெரியாது. நான் யாரையும் கடிப்பதில்லை, யாருக்கும் எந்தத் தீங்கும் செய்வதில்லை என்பது அவர்களுக்கு எப்படித் தெரியும்?" என்று பாம்பு சொல்லிற்று.


இதைக் கேட்டதும் அந்த பிரம்மச்சாரி, சீச்சீ, நீ இவ்வளவு முட்டாளா? உன்னைக் காப்பாற்றிக் கொள்ள உனக்குத் தெரியாமல் போய்விட்டதே! மற்றவர்களைக் கடிக்காதே என்று சொன்னேனே தவிர, சீறாதே என்று சொல்லவில்லையே. சீறி அவர்களை ஏன் பயமுறுத்தவில்லை?" என்றார். (தொடரும்)

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I

07



கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்




### எண்களும் எண்முறைமைகளும்

எண் கணிதம் இரத்தத்தைப் போல, காற்றைப் போல நம்மோடு கலந்திருக்கிறது. பண்டைய காலத்தில் செவ்விந்தியர்கள், பாபிலோனியர்கள், மாயன்கள், எகிப்தியர்கள், கிரேக்கர்கள், தமிழர்கள், ரோம் மக்கள் என ஒவ்வொரு இனக்குழு மக்களும்,பொருட்களை எண்ணுவதற்கு ஒவ்வொரு முறையை வைத்திருந்தனர். அதாவது ஆரம்ப காலங்களில் கால்நடைகள் மற்றும் தங்களிடம் இருந்த பொருட்களை எண்ணுவதற்காக எண்கள் என்ற விடயம் தேவைப்பட்டது.

சிறிய கற்களைக் கொண்டும், சில உருவங்களைக் கொண்டும் எண்ணிக்கையை கணக்கிட்டனர். இவ்வாறு தொடக்கக் காலத்தில் வெவ்வேறு நாடுகளில் வாழ்ந்த வெவ்வேறு இன மக்கள் வெவ்வேறு வகையான எண் குறியீடுகளைக் கண்டுபிடித்துப் பயன்படுத்தினார்கள்.

**ஆரம்ப காலங்களில் கால்நடைகள் மற்றும் தங்களிடம் இருந்த பொருட்களை எண்ணுவதற்காக செவ்விந்தியர்கள், பாபிலோனியர்கள், மாயன்கள், எகிப்தியர்கள், கிரேக்கர்கள், தமிழர்கள், ரோம் மக்கள் என ஒவ்வொரு இனக் குழு மக்களும், ஒவ்வொரு விதமான முறையை வைத்திருந்தனர்.**

அதாவது பாபிலோனியர்களின் பழைய முறைப்படி, சிங்கத் தலை வரைந்தால் ஒன்று, கழுகு வரைந்தால் இரண்டு, பூ என்றால் மூன்று, இப்படியாக ஒவ்வொரு எண்ணிக்கைக்கும் ஒரு உருவம். ஆனால் அக்காலத்தில் யாரிடமும் எண்களைப் பற்றிய மிகச் சரியான புரிதல் இருக்கவில்லை. அதை முதலில் உருவாக்கியவர்கள் இந்தியர்கள். ஆனால், யாராலும் இருபதைத் தாண்ட முடியவில்லை. ஏனெனில் பூச்சியம் (சைபர்) என்ற எண்ணே அப்போது கிடையாது. அதனால் பெரிய எண்களை யாராலும் மிகச் சரியாக எழுத முடியவில்லை.

அப்போது தான் பிரம்மகுப்தர் தனது புத்தகத்தில் 'சூன்யா'வைப் பற்றிச் சொன்னார். சமஸ்கிருத்தில் சூன்யா என்றால் ஒன்றும் இல்லை எனப் பொருள். அதாவது பூச்சியம். அதாவது சைபர். பிரம்மகுப்தர் (Brahmagupta) 598 முதல் 668 வரையிலான காலப்பகுதியில் வாழ்ந்த ஓர் இந்தியக் கணிதவியலாளர் மற்றும் வானியல் வல்லுநர் ஆவார். பிரம்மகுப்தர் முதலில் பூச்சியத்தைக் கணக்கிடுவதற்கான விதிகளை வழங்கினார்.

**பண்டைய காலத்தில் பொருட்களை எண்ணுவதற்காக எண்கள் என்ற விடயம் தேவைப்பட்டது. சிறிய கற்களைக் கொண்டும், சில உருவங்களைக் கொண்டும் எண்ணிக்கையை கணக்கிட்டனர். சிங்கத் தலை வரைந்தால் ஒன்று, கழுகு வரைந்தால் இரண்டு, பூ என்றால் மூன்று, இப்படியாக ஒவ்வொரு எண்ணிக்கைக்கும் ஒரு உருவம். ஆனால் யாரிடமும் எண்களைப் பற்றிய மிகச் சரியான புரிதல் இருக்கவில்லை. புரிதலை முதலில் உருவாக்கியவர்கள் இந்தியர்கள்.**

எண்களில் ராஜாக்கள் இந்தியர்கள் என்றாலும், அதற்கடுத்தபடியான கணித வளர்ச்சியில் இந்தியர்களின் பங்கு மிகக்குறைவு. ஏனெனில் அந்த அசாத்திய சாதனைகளை கிரேக்கர்கள் செய்தனர். கிரேக்கர்கள் தான் கணிதத்தின் ஆரம்பக்கால வளர்ச்சியில் முக்கியமான பல கண்டு பிடிப்புகளை நிகழ்த்தினர். சோக்ரட்டீஸ் தூண்டிய அறிவுத்தீ அவர்களை அப்படிச் சிந்திக்க வைத்தது. எதையும் கேள்வி கேட்டு, விளக்கிக் கொள்ளும் பழக்கம் கிரேக்கர்களிடம் இயல்பாகவே இருந்தது. அதனால், அவர்கள் கணிதத்தை ஆழமாக செம்மைப்படுத்தியதில் ஆச்சரியம் ஏதுமில்லை.

**பிரம்மகுப்தர் (Brahmagupta) 598 முதல் 668 வரையிலான காலப்பகுதியில் வாழ்ந்த ஓர் இந்தியக் கணிதவியலாளர் மற்றும் வானியல் வல்லுநர் ஆவார். பிரம்மகுப்தர் முதலில் பூச்சியத்தைக் கணக்கிடுவதற்கான விதிகளை வழங்கினார். பூச்சியத்தின் கண்டுபிடிப்புதீ தான் எண் முறைமையிலேயே பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. ஆனாலும் அந்தக் காலத்தில் கணிதத்தில் அசாத்திய சாதனைகளை கிரேக்கர்கள் செய்தனர்.**

### பூச்சியம் பற்றி......

ஒவ்வொரு எண்ணிக்கைக்கும் ஒரு எண் உருவம் இருந்தாக வேண்டும் என்ற மட்டத்தில் தான் ஆரம்பக்கட்டத்தில் மனித மூளை சிந்தித்தது.

பூச்சியம் என்பது முதலில் ஒரு தனி எண்ணாகவும் பிறகு இடத்தைப் பொறுத்து மதிப்பு தரக் கூடிய எண்ணாகவும் மாறிய கால கட்டம் மிக நீண்டது. 1 முதல் 9 வரையிலான எண் உருவங்கள் போதும். அவற்றோடு பூச்சியத்தை இணைத்து எல்லா எண்ணிக்கையையும் எழுதி விட முடியும் என்ற சிந்தனை மனிதரிடம் படிப்படியாக நீண்ட காலப் போக்கில் தான் உருவாகி உள்ளது.

ஒன்றுமில்லை என்பதை எப்படிக் குறிப்பது? பழங்கால மனிதர்கள் பலவாறு சிந்தித்துள்ளனர். ஒன்றுமில்லை என்பதைக் குறிக்கச் சில குறியீடுகள் எகிப்தில் கிறிஸ்து பிறப்பதற்கு 3700 வருடங்களுக்கு முன்பாகவே இருந்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இன்றைக்கு ஈராக் எனப்படும் பழைய மெசபடோமியா பகுதியில் வாழ்ந்த மக்களும் கிறிஸ்து பிறப்பதற்கு 300 வருடங்களுக்கு முன்பாகவே சில அடையாளக் குறிகளைப் பயன்படுத்திய ஆதாரங்கள் உள்ளன.

தென் அமெரிக்கக் கண்டத்தில், மாயன் நாகரிகத்தைப் பின்பற்றிய மக்கள் வசித்தனர். அவர்கள் கி.பி. முதலாம் நூற்றாண்டில் ஒன்றுமில்லை என்பதைக் குறிப்பதற்கு அடையாளக் குறியைப் பயன்படுத்தியுள்ளனர். ஒன்றுமில்லை என்பதற்கான அடையாளக் குறிகள் இந்தியத் துணைக் கண்டத்திலும் பயன்படுத்தப்பட்டன. ஆனாலும் ஒன்றுமில்லை என்பதை ஒரு எண் உருவமாகவும் அதை ஒரு மதிப்பாகவும் கருதும் கணிதக் கோட்பாட்டுக்கான விதை இந்தியாவில் தான் கி.பி. 600 களில் தொடங்கியுள்ளது என்கிறது இன்றைய கணித உலகம்.

கி.மு. 200 களில் வாழ்ந்த வராக அறியப்படும் பிங்கலர் என்பவர் தான் சூன்யம் எனப்படும் சொல்லைப் பயன்படுத்தியதாக அறியப்படுகிறது. மனதைப் பற்றியும் சிந்தனையைப் பற்றியும் காலங்காலமாக விவாதிக்கிறது இந்தியத் தத்துவம். அதில் சூனியம் என்பது ஒரு தத்துவச் சொல்லாடலாக ஆயிரக்கணக்கான வருடங்களாக இருக்கிறது.

கி.பி. 458 இல் லோகவிபாகா எனும் சமண நூல் பூச்சியத்தை இட மதிப்புக் கோட்பாட்டின் படி பயன்படுத்தியுள்ளதாக ஒரு விவாதம் உள்ளது. 498 இல் இந்தியக் கணித மேதை ஆரியப்பட்டரும் பூச்சியத்தை விவாதித்துள்ளார். 628 இல் பிரம்மகுப்தர் சில கணித விதிகளை உருவாக்கியதில் பூச்சியத்தை விவாதித்துள்ளார்.

சீனத்தில் பழங் காலத்திலேயே பூச்சியம் பயன்படுத்தப்பட்டாலும் இந்தியாவைப் போல ஒரு எண் உருவமாக அது கருதப்படவில்லை. இந்தியாவில் ஏற்பட்ட கணித அறிவை அரபி மொழி உள்வாங்கியது. கி.பி. 976 இல் பூச்சியம் என்பதை ஷிப்ர் என (ஒன்று மில்லாதது என அரபியில் அர்த்தம்) இந்து-அரபி எண் அமைப்பு முறை என்ற பெயரில் ஐரோப்பாவுக்குள்ளே இந்தக் கணித முறை நுழைந்தது.

இத்தாலிய கணித அறிஞர் பிபோனாச்சி இதற்கான இணைப்பாக இருந்துள்ளார். முதன் முதலில் பூச்சியத்தை பயன்படுத்திய ஐரோப்பிய நூல் 1275 இல் பிரசுரிக்கப்பட்ட ஒரு பிரெஞ்சு புத்தகம் எனப்படுகிறது.

### விரல் எண் முறைமை (கி.பி. 8 ஆம் நூற்றாண்டு)

பழைய காலத்தில் (இப்போதும் இந்த நடைமுறை தமிழ்நாட்டில் உள்ளது). பொதுவாக மாட்டுச் சந்தைகளில் மாடுகள் விற்பனை யாவதைப் பார்க்கும் போது சாதாரண விற்பனை போலத்தான் இருக்கும்.

(தொடரும்...)

## சீனிக்கான...

யின் மொத்த விலையாக 140 ரூபாயும் சில்லறை விலை 150 ரூபாயாகவும் இன்று முதல் விற்பனை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-3)

## அரிசிக்கு தட்டுப்...

உண்டதாக நீர்ப்பாசன அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாண் சாப்பிடுவதைவிட மரவள்ளி கிழங்கு, பாசிப் பயறு சாப்பிடுவதில் எந்த பாதிப்பும் ஏற்படாது எனவும் மரவள்ளி கிழங்கு புற்றுநோய்க்கும் சிறந்த மருந்து எனவும் அவர் கூறியுள்ளார்.

கண்டி தலதா மாளிகையில் நடைபெற்ற பூஜை ஒன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

நானும் ஒரு விவசாயி, நான் சேதனப் பசளையை பயன்படுத்தி பயிர் செய்தேன். புதியவர்களுக்கு இது புதிய அனுபவம். தொடர்ந்தும் செய்தால், வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும். முதல் போகத்தில் அனுபவம் கிடைக்கும். அறுவடை குறைந்தால், இழப்பீடு வழங்கப்படும் என உறுதியும் வழங்கப்பட்டுள்ளது. அதற்கு அஞ்சத் தேவையில்லை என்றார். (ம-3)

## பரீட்சைகளுக்...

சில் பரீட்சைகள் 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் உயர்தரப் பரீட்சை 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 07ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மார்ச் மாதம் 5ஆம் திகதி சனிக்கிழமை வரையில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை சாதாரண தரப் பரீட்சை 2022ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஜூன் மாதம் முதலாம் திகதி புதன்கிழமை வரையில் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-3)

## பணி நிறுத்தம்...

துள்ளது.

எனினும் பராமரிப்புச் சேவையில் இருக்கும் ஊழியர்களை கொழும்புக்கு அழைக்கவுள்ளதாக இலங்கை மின்சார சபை, ஐக்கிய தொழிற்சங்கக் கூட்டமைப்பு அழைப்பாளர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் பணிநிறுத்தம் தொடர்பில் இன்று 3ஆம் திகதியின் பின்னர் ஆலோசிக்கப்படும் என்று ரஞ்சன் ஜெயலால் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், 1996 இல் 72 மணித்தியால தொழிற்சங்க நடவடிக்கையை போன்று நவம்பர் 3ஆம் திகதி தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று ஏற்கெனவே மின்சார சபையின் தொழிற்சங்க கூட்டமைப்பு அண்மையில் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## நல்லூரில்...

கந்தசஷ்டி உற்சவம் எதிர்வரும் 05ஆம் திகதி ஆரம்பமாகி 11ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

சுகாதாரத் துறையினரது அறிவுறுத்தலின்படி பக்தர்கள் வீடுகளில் இருந்து தரிசனம் செய்யும் பொருட்டு நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தினால் உற்சவத்தில் இடம்பெறும் நிகழ்வுகளை ஆலய உத்தியோகபூர்வ "YouTube" தளத்தில் நேரலையாக ஒளிபரப்பப்படவுள்ளது.

ஆகையால் கந்தசஷ்டி உற்சவ காலத்தில் உற்சவ நேரங்களின்போது நாட்டின் தற்போதைய சுகாதார நடைமுறைகளின்படி பக்தர்கள் ஆலயத்தினுள்ளும் வெளிவளாகத்திலும் ஒன்றுகூடுவதை தவிர்க்கும் பொருட்டு உற்சவ நேரங்களின்போது ஆலயம் வருவதனைத் தவிர்த்து வீடுகளில் இருந்து தூர தரிசனம் செய்யுங்கள் என தேவஸ்தானம் கேட்டுக்கொண்டுள்ளது. (ம-3,18,33,104)

## தமிழ் - முஸ்லிம்...

தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நேற்று யாழிலுள்ள தனியார் விடுதி ஒன்றில் தமிழ் பேசும் கட்சிகளின் கலந்துரையாடலுக்குப் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்றைய சந்திப்பு ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் என்னிடமும் மனோ கணேசனிடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க இந்த சந்திப்பை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

அடையாளரீதியாக நாம் இன்று (நேற்று) சந்தித்தாலும் எதிர்வரும் காலங்களில் நாங்கள் சந்தித்து இதனை முன்கொண்டு செல்வதற்கு தீர்மானித்துள்ளோம்.

தமிழ் தரப்புக்களும் முஸ்லிம் தரப்புகளும் தேர்தல் உட்பட அனைத்து நடவடிக்கையிலும் ஒன்றிணைந்து செயற்பட சாத்தியப்பாடுகள் இருக்கின்றது. அனைத்திலும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான அவசியம் மிகவேகமாக உணரப்பட்டு இருக்கின்றது என்றார். (ம-3)

## சிங்கள...

கின் சில கிராமங்களை எல்லை நிர்ணயம் என்ற போர்வையில் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துடன் இணைப்பதற்கான முனைப்பை அரசாங்கம் எடுத்துள்ள நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததே குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது. (ம-3,250)

## அரசியல் தீர்வு...

தமிழ் பேசும் கட்சிகள் ஒன்றிணைந்து நேற்று யாழில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் கலந்துரையாடல் ஒன்றினை முன்னெடுத்தனர்.

இந்த கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், ரவூப் ஹக்கீம் மற்றும் மனோ கணேசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சுமார் ஐந்து மணிநேரம் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலின் இறுதியில் நான்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவை கீழ்வருமாறு,

இந்த நாட்டின் அரசியல் சாசனத்தில் அமைந்திருக்கும் 13ஆவது திருத்தச்சட்டம் நடைமுறைப்படுத்த வேண்டும். அத்துடன் மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும்.

அரசாங்கத்தினாலும் அரசாங்க ஆதரவுடனும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டமிட்ட காணி அபகரிப்பு நடவடிக்கைகள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டு அதன்கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

பல்லின, பல்மொழி, பல்மத மக்கள் வாழும் இந்த நாட்டில் "ஒரே நாடு - ஒரே சட்டம்" என்ற கோட்பாட்டை முன்னெடுப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்காகவுமாக அமைக்கப்பட்டிருக்கும் ஜனாதிபதி செயலணி மக்களுக்கிடையில் ஒற்றுமையின்மையும் பிரிவினையும் ஏற்படுத்தக் கூடிய பாரிய ஆபத்தைக் கொண்டிருப்பதால் நாம் அதனை திட்டவட்டமாக நிராகரிக்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3,18,33,104)

## இணை...

உரிமைக்கு அவர்கள் உரித்துடையவர்கள் என்பவை ஏற்றுக் கொள்ளப்பட்டு இணைந்த வடக்கு, கிழக்கில் உயர்ந்தபட்ச சமஷ்டி அதிகார கட்டமைப்பு ஒன்றின் கீழ் ஏற்படுத்தப்படும் அதிகார பகிர்வே தேசிய இனப்பிரச்சினைக்கான நிலையான தீர்வாகும் என தமிழ் மக்கள் கூட்டணி தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற தமிழ், முஸ்லிம் கட்சிகள் பங்கேற்ற கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

சுகயீனம்காரணமாக விக்னேஸ்வரன் இக்கூட்டத்தில் பங்குபற்ற முடியவில்லை. அவர் சார்பாக இந்த ஆவணம் பேராசிரியர் சிவநாதனால் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சமஷ்டி கட்டமைப்பின் கீழ் இத்தகைய ஒரு நிலையான் தீர்வினை ஏற்படுத்துவதற்கு இந்தியா எல்லாவிதமான முன்னெடுப்புக்களையும் மேற்கொள்ள வேண்டும் என்று நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.

அதேவேளை, குறுகிய அரசியல் இலாபம், தூரநோக்கற்ற சிந்தனை மற்றும் கடும் பௌத்த இனவாத சிந்தனை ஆகியவற்றின் அடிப்படையிலான அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள ஆபத்துக்களை கவனத்தில் கொண்டும், வடக்கு, கிழக்கில் யுத்தத்தினால் மிகமோசமாக பாதிக்கப்பட்டுள்ள தமிழ் பேசும் மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாகவும், நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு சிங்கள குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதை தடுப்பதற்கும், அரசியல் அமைப்பில் ஏற்கெனவே இருக்கின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தை அதன் ஆரம்ப நிலையில் இருந்தவாறு முழுமையாக அமுல்படுத்துவதற்கு இந்தியா காலதாமதம் எதுவும் இன்றி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாம் கோரிக்கை விடுக்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## நெருக்கமாக்கிக்...

களை யாராலும் பிரிக்க முடியாது.

அவர்கள் எமது ஆதரவாளர்கள் இல்லை. அவர்கள் நம் கைக்கூலிகள் இல்லை. எனவே அன்று இருந்த அனைத்து கட்சிகளும் இணைந்திருக்க வேண்டும்.

அந்த ஒற்றுமையை பாதுகாப்பது பிரதான கட்சியான எமது பொறுப்பு என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (ம-3)

### மெகா பவர்

திகதி 02/11/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0922
வெற்றி எழுத்து U | சுப்பர் இலக்க 15 | வெற்றி இலக்கங்கள் 31 38 66 68

### சுபிரி வாசனா

சீட்டிழுப்பு திகதி 2021/11/02 | சீட்டிழுப்பு இலக்கம் 1628
சுப்பர் இலக்கம் 14 | வெற்றி இலக்கங்கள் 03 31 37 50
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

### மஹஜன சம்பத

திகதி 2021/11/02
சீட்டிழுப்பு இலக்கம் 4574
ஆங்கில எழுத்து Z | வெல்லப்பட்ட இலக்கங்கள் 3 1 5 8 3 5
தேசிய லொத்தர் சபை

### கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள் NLB

சீட்டிழுப்பு திகதி 02.11.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2869
ஆங்கில எழுத்து M | வெற்றி இலக்கங்கள் 21 35 47 53
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி - 2021.11.02
சீட்டிழுப்பு இலக்கம் - 604
ஆங்கில எழுத்து M | வெற்றி இலக்கங்கள் 01 54 58 64
NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

### அத கோடிபதி ADA KOTIPATHI

கிழமை: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1377
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 02.11.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 4,600,900
வெற்றி இலக்கங்கள் 27 40 53 67 | ஆங்கில எழுத்து W
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா Shanida

கிழமை: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 3712
வர்ணம் :
சீட்டிழுப்பு திகதி: 02.11.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 4,109,500
வெற்றி இலக்கங்கள் 05 15 19 33 | ஆங்கில எழுத்து K
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### SUPER BALL சுப்பர் போல்

Draw Numnber சீட்டிழுப்பு வாரம் 1551
Colour நிறம் இள நீலம்
Full Draw Date சீட்டிழுப்பு திகதி 2021 / 11 / 02
Week Days Name தினம் செவ்வாய்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் P 29 62 68 74
Total Value of Prizes வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா 2,865,360/-
அபிவிருத்தி லொத்தர் சபை

### ராசி அதிர்ஷ்டம்

சுப்பர் ஜக்பொட் ரூ. 3,998,654/-
Draw Date திகதி 2021 / 11 / 02
Draw Number வெற்றி வாரம் 3263
Colour வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 07 33 34 50 | கும்பம்
Total Value of Prizes வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,253,640/-
அபிவிருத்தி லொத்தர் சபை

### ஜய சேத (Jaya Sampatha)

சீட்டிழுப்பு வாரம்: 760
வர்ணம்: இளஞ்சிவப்பு
திகதி: 02. 11. 2021 செவ்வாய்க்கிழமை
T 21 28 47 52
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 85,640,290/-
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 15 . 08 . 1937

மறைவு 04 . 10 . 2021

கடந்த 04.10.2021 அன்று இறைபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

## அமரர் திருமதி புவனேஸ்வரி இராசையா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று முன்தினம் (01.11.2021) திங்கட் கிழமை காலை 9.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (03.11.2021) புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் மற்றும் வெளிநாடுகளிலும் உள்ளூரிலும் இருந்து தொலை பேசி மூலமாக இரங்கல் தெரிவித்தோருக்கும் அன்னாரின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது குடும்பத் தினரின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

இல. 374, கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

077 112 7614

இங்ஙனம்
குடும்பத்தினர்

(8479)

---

General Knowledge
SLEAS Open
SLAS Open & Ltd.

இலவச கருத்தரங்கு
FREE SEMINAR

ZOOM ID: 876 6711 3911 Passcode : GK
Wednesday (03/11/2021) @7.00pm - 8.00pm

WhatsApp : 076 055 4530

(8476)

---

## 572 பேருக்கு கோவிட்

நாட்டில் மேலும் 572 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, நாட்டில் இதுவரை கொவிட் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 542,211 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றில் இருந்து மேலும் 448 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-03)

---

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மானிப்பாய் சமுர்த்தி வங்கி வீதியில்
3 1/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு)
1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட ஒரு துண்டும்
1 3/4 பரப்பாக பிரிக்கப்பட்ட ஒரு துண்டும்
14 அடி பாதையுடன், மருதடி விநாயகர் கோவிலில் இருந்து
700 மீற்றர் தூரம்.

பார்வையிடும் நேரம்

காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை.
தரகர் தேவையில்லை. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 814 7389, 077 614 7333

(8478)

---

நீங்களும் விரைவில் அமெரிக்காவில்... இன்னும் 02 நாட்களே

## அமெரிக்க அதிஸ்ட விசா

ஒரு தடவை மட்டும் பதிவுசெய்து
கிடைக்காமல் அலுத்தக்கொண்டால்
இந்தத்தடவை உங்களுக்குரிய
வெற்றிவாய்ப்பை இன்னொருவருக்கு
நீங்கள் விட்டுக்கொடுக்கிறீர்கள்
என எடுத்துக்கொள்ளலாம்.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

இந்த வருடம் A/L
எடுக்கின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்

55000 இலவச விசாக்கள்

0768226244

அதிஸ்டம் கிடைக்கும் என்று நம்பி நான் பதியவில்லை. எதிர்பாராத விதமாக எனக்கு விசா கிடைத்தது. விண்ணப்பம் பதிந்தது முதல் விசா கிடைக்கும் வரை,



நம்பிக்கையான
பயணத்திற்கு
V2 Travels தான்.
மாற்று கருத்தே இல்லை.

விருசன்
அமெரிக்கா விசா வெற்றியாளர்

V2 Travels

(C-2919)

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0777068777 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

---




இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.